பக்கங்கள் : பதினாறு + கல்விச்சுடர் 4

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 31 செவ்வாய்க்கிழமை (14.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :200

## பேரினவாதக் கொள்கைகளுக்குத் தகனக்கிரியை செய்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான பிக்குகளின் செயற்பாடுகளைக் கண்டித்து யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் நேற்றுப் பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பௌத்த பேரின வாதக் கொள்கைகளைக் குறியீடாகக் காட்டும் சவப்பெட்டி ஒன்றும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவி ஒன்றும் எரிக்கப்பட்டன.

"பொதுக்கட்டமைப்புக்கும் தமிழ்மக்களுக்கும் எதிராகப் பௌத்த குருமார்கள் தென்னிலங்கையில் மேற்கொண்டுவரும் எதிர்ப்பு நடவடிக்கைகளை உடன்நிறுத்தவேண்டும். இல்லையேல் பௌத்த பேரினவாதத்துக்கெதிராக நாம் கிளர்ந்தெழுவோம்" - என்று திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் நின்று அவர்கள் கோஷமெழுப்பினர். பின்னர் சவப்பெட்டியையும், கொடும்பாவியையும் தீ மூட்டி எரித்தனர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஆரம்பமானது. மரணச் சடங்குகளில் அமைக்கப்படுவது போன்ற விசேட மேடையொன்று வளாகத்தில் அமைக்கப்பட்டிருந்தது. அதில் பௌத்த பேரினவாதக் கொள்கை அடங்கியதாகக் குறிக்கப்பட்ட பிரேதப் பெட்டியொன்று வைக்கப்பட்டிருந்தது. அதனருகே ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவியும் வைக்கப்பட்டிருந்தது.

பிரேதப் பெட்டி வைக்கப்பட்டிருந்த இடத்தில் மரணச் சடங்கு ஒன்றின்போது நிகழ்த்தப்படும் இந்துசமய முறைப்படியான கிரியைகள்

(16ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்புக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தின்போது

# ஜே.வி.பி. ஆதரவு மாணவர்களை தடியடி நடத்தி விரட்டினர் பொலீஸார்!

## சாகும் வரை உண்ணாவிரதமிருந்த பிக்குவையும் தூக்கிச்செல்லும் நிலை

கொழும்பு,ஜூன்14

**பொதுக்கட்டமைப்புக்கு எதிராகத் தலைநகர் கொழும்பில் ஜே.வி.பி. ஆதரவுப் பல்கலைக்கழக மாணவர்களும் பிக்கு மாணவர்களும் நேற்று நண்பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் ஜனாதிபதி மாளிகையை நோக்கிச் செல்ல முயன்ற போது பொலீஸார் அவர்களை ஓடஓட அடித்து விரட்டினர். பொதுக்கட்டமைப்புக்கு எதிராகக் கோட்டை ரயில்நிலையத்துக்கு முன்னால் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த பிக்குவையும் இந்தக் களேபரத்துக்கு மத்தியில் தூக்கிச்செல்ல வேண்டியதாயிற்று.**

பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. சார்புடைய அகில இலங்கைப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றுக் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலத்தின் மீதே பொலீஸார் இத்தாக்குதலை நடத்தினர். இதனால், கொழும்பு, கோட்டை, புறக்கோட்டைப் பகுதிகள் நேற்று அல்லோலகல்லோலமாயின.

நேற்று நண்பகல் கொழும்பு, மருதானை ஆனந்தாக் கல்லூரிச் சந்தியில் ஒன்றுதிரண்ட சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பல்கலைக் கழக மாணவர்கள், 'மருதானைச் சந்தியினூடாக மருதானை தொழில்நுட்பக் கல்லூரிப் பக்கம் சென்று அங்கிருந்து கோட்டை ரயில் நிலையத்தை அடைந்தனர்.

அங்கு கோட்டை ரயில் நிலைய முன்றிலில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தேசிய பிக்குகள் முன்னணியின்

(16ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வீச்சு!

மட்டக்களப்பில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக அலுவலகம் மீது நேற்றுமுன்னிரவில் இரண்டு குண்டுகள் வீசப்பட்டன. அலுவலகம் சேதமுற்றது. அலுவலக ஊழியர் ஒருவர் காயமுற்றார்.


## கடைசி நேர முயற்சி

கொழும்பு,ஜூன்14

அரசைக் கவிழவிடாமல் காப்பாற்றும் கடைசி முயற்சியாக - ஜே.வி.பியினரைச் சமாளிக்கும் இறுதி நேர எத்தனத்தில் - பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்றிரவு ஈடுபட்டார் எனத் தெரியவந்தது.

தமது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் பங்காளிகளான பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி. ஆகியவற்றின் தலைவர்களை நேற்றிரவு10 மணியளவில் தமது உத்தியோகபூர்வ இல்லமான அலரி மாளிகைக்கு அழைத்து கடைசி நேரப்பேச்சுக்களில் அவர் ஈடுபட்டார் எனத் தெரியவந்தது.

பிக்குவைத் தூக்கிச் செல்கின்றனர்.



## சிவராம் படுகொலையின் மர்மம் துலங்குகிறது: அவரது கைத்தொலைபேசி 'சிம்' அட்டை மீட்பு!

கொழும்பு,ஜூன்14

பிரபல பத்திரிகையாளர் சிவராம் படுகொலையின் மர்மம் துலங்கியிருப்பதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

இக்கொலை தொடர்பான சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சமயத்தில் சிவராம் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசியின் 'சிம்' அட்டை (Sim Card) மற்றும் சிவராமைக் கடத்தப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வாகனம் என்பன பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

இக்கொலைச் சம்பவம் தொடர்பாகக கைதுசெய்யப்பட்டுள்ள பிரதான சந்தேகநபரான - புளொட்' அமைப்பின் இராணுவப் பொறுப்பாளர் பீற்றர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவல்களை இக்கொலைச் சம்பவம் குறித்து விசாரித்து வரும் பொலீஸ் குழுவின் தலைவர் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் லூகொட தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பிடத்துக்கு அருகில் வைத்து கடத்திச் செல்லப்பட்ட ஊடகவியலாளர் சிவராம், பின்னர் நாடாளுமன்றுக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்தக கொலையின் சூத்திரதாரிகளைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் சரத் லூகொடை தலைமையில் (16ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழு நேற்று தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெளிவிவகாரக் குழுவினர் நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இச்சந்திப்புக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நேற்றுக் கிளிநொச்சிக்கு வந்திருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதனும் கிளிநொச்சிக்கு வந்திருந்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் 'அவரைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்.

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது பேசப்

(16ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
**கல்விச்சுடர்**

5 ஆம் தர புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கல்விச்சுடர் இன்றைய உதயனில் வெளியாகின்றது.

## பொதுக்கட்டமைப்புக்கான உடன்பாட்டில் அமைச்சுச் செயலாளரே ஒப்பமிடுவார்

### இப்படிக் கூறுகிறார் ஜனாதிபதி

"பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் ஜனாதிபதி என்ற ரீதியில் நானும் கைச்சாத்திடப்போவதில்லை. பிரதமரும் கைச்சாத்திடப்போவதில்லை. அமைச்சின் செயலாளர் ஒருவரே கைச்சாத்திடவுள்ளார். இந்தப் பொதுக்கட்டமைப்பில் என்ன விடயங்கள் உள்ளன என்பது படிக்காத முட்டாள்களுக்கும் தெரியும். அப்படியான நிலையில் ஜே.வி.பி. இதனை எதிர்ப்பது ஏன் என்பது புரிந்துகொள்ளமுடியாதது.

"ஜே.வி.பி.யை அரசாங்கத்திலிருந்து விலகச் சொன்னது யார்? நானா?சுதந்திரக் கட்சியா? எதையும் புரியாமல் ஜே.வி.பி.யினர் தாங்கள் நினைத்தவாறு செயற்படுகின்றனர்."

- இவ்வாறான பல விடயங்களைச் சுட்டிக் காட்டினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுப் பிற்பகல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அனைத்து அமைப்பாளர்களையும் சந்தித்து ஜனாதிபதி நீண்டநேரம் கலந்துரையாடினார். அப்போதே மேற்கண்டவாறு ஜனாதிபதி குறிப்பிட்டார். அவர் மேலும் அங்கு கூறியிருப்பதாவது:-

இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியின் எதிர்ப்புக்கு ஆதரவான கருத்துக்

(16ஆம் பக்கம் பார்க்க)

# இரத்ததானம் வழங்குவதால் எவருக்கும் எந்தவிதப் பாதிப்பும் ஏற்படமாட்டாது!

## இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் சிவசங்கர் தகவல்

யாழ்ப்பாணம்,ஜூன்14

இரத்ததானம் செய்வதால் எவருக்கும் எந்த விதமான பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இதனை நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

- இவ்வாறு தெரிவிக்கிறார் யாழ். போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் கே.சிவசங்கர்.

இன்று உலக இரத்ததான தினம். இத்தினத்தை முன்னிட்டுக் கேட்டபோதே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -




யாழ்.மாவட்டத்தில் சுமார் 500 இற்கும் மேற்பட்டவர்கள் தொடர்ச்சியாக இரத்ததானம் செய்துவருகின்றனர்.

இருந்தும் எமது இரத்த வங்கியில் இரத்திற்குப் பெரும் தட்டுப்பாடே நிலவிவருகின்றது.

எனவே, குருதி வழங்கத் தகுதியுடைய அனைவரும் இரத்ததான சேவையில் ஈடுபட்டு நோயாளர்களின் உயிர்காக்கும் நடவடிக்கைக்கு உதவமுன்வரவேண்டும்.

உறவினர்கள் எவரும் இல்லாத நோயாளர்களுக்கு சடுதியாக இரத்தம் தேவைப்படுமிடத்து, குறிப்பாக விசேட வகையான இரத்தம் தேவைப்படுமிடத்து நாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றோம்.

அந்த நேரங்களில் எம்முடன் தொடர்ந்து தொடர்புவைத்துக்கொண்டிருக்கும் இரத்ததானம் செய்பவர்களுடன் உடனடியாகத் தொடர்புகொண்டு உதவி கேட்போம்.

இரத்ததானம் செய்பவர்கள் மூலம் நோயாளர்கள் பெரும் நன்மையை அடைகின்றனர். ஒருவரிடம் எடுக்கப்படும் இரத்தம் கிட்டத்தட்ட 5 பேர்களின் உயிர்களைக் காப்பாற்றக் கூடியது. 18-60 வயது வரை 45 கிலோ எடையுள்ளவர்கள் 4 மாதத்திற்கு ஒரு தடவை இரத்தம் வழங்கலாம்.

இவ்வாறு இரத்தம் வழங்குபவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுகாதாரச் சத்துணவு அமைச்சர் நிமால் ஸ்ரீபால டி சில்வா கலந்துகொள்ளவுள்ளார். நிகழ்வில் இரத்த வங்கிகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் இரத்ததானம் செய்பவர்களைக் கௌரவித்து நன்றி செலுத்தும் நிகழ்வு எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தை விட தென்பகுதியில் இரத்ததானம் செய்பவர்களின் விகிதாசாரம் அதிகமாகவே உள்ளது. இதுவரை இரத்ததானம் செய்பவர்கள் தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் நிறுவன ரீதியாகவோ தனியாகவோ எம்முடன் தொடர்புகொள்ளலாம்.

தற்போது விசேட சத்திரசிகிச்சைப் பிரிவுகள் யாழ்.போதனா வைத்தியசாலையில் இயங்குவதால் இரத்ததான தேவை மேலும் அதிகரித்துள்ளது.

இதுவரை பாடசாலைகள், கழகங்கள், சமய நிறுவனங்கள் என்பவற்றின் ஊடாகப் பெரும் எண்ணிக்கையானோர் இரத்ததானம் செய்துள்ளனர். எனினும், இரத்தம் என்பது தேவையடைந்து கொண்டுபோகின்ற ஒன்றாகவே காணப்படுகின்றது.

இதேவேளை -

இரத்ததானத்தில் ஈடுபடுபவர்களை - ஈடுபட விரும்புபவர்களை - உற்சாகப்படுத்த விரும்பும் நிறுவனங்களோ, தனிநபரோ இரத்த வங்கியுடன் இணைந்து செயற்பட முடியும். அவ்வாறு இணைந்து செயற்பட்டால் இரத்ததான நிகழ்வுகளை மிகவும் சிறப்பாக நடத்தமுடியும் என்றார் அவர். (எ-203-204)

## தென்மராட்சி மக்கள் மீண்டும் போராட்டம்

தென்மராட்சி,ஜூன்14

தமது பிரதேசத்தில் மீளக்குடியமரக் கோரும் தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களின் இரண்டாம் கட்ட நடவடிக்கை எதிர்வரும் 27ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

அன்றைய தினம் காலை 9 மணிக்கு உசன் கந்தசுவாமி ஆலயத்தில் இறை பிரார்த்தனையில் தென்மராட்சி கிழக்குப் பகுதி மக்கள் ஈடுபடுவார்கள். பின்னர் தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரும் மகஜரை உசன் இராணுவப் பிரிவுப் பொறுப்பதிகாரியிடம் கையளிப்பார்கள்.

அங்கிருந்து ஏ-9 வீதி ஊடாகச் சென்று கொடிகாமத்தில் உள்ள சாவகச்சேரி பிரதேச சபை அலுவலகத்தில் மகஜரைக் கையளிப்பார்கள்.

ஏ-9 வீதியில் ஊர்வலம் நடைபெறும்போது வீதிப் போக்குவரத்து முற்றாகத் தடைசெய்யப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. இந்தத் தகவல்களை தென்மராட்சி இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் வே.தந்தசாமி அறிவித்துள்ளார். (ஒ-117)

## ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம்

தலைநகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் உள்ள சகல கேந்திர நிலையங்களிலும் அதிரடிப்படையினருடன் இராணுவத்தினரும் பாதுப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முப்படைகளும் உஷார்படுத்தப்பட்டுள்ளன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்புரையின் பேரில் பொலீஸ் மற்றும் முப்படையினரது விடுமுறைகளும் ரத்துசெய்யப்பட்டுள்ளன. விடுமுறையில் சென்றவர்களையும் உடனடியாகக் கடமைக்குத் திரும்பும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜே.வி.பியினர் இன்று லிப்டன் சுற்றுவட்டாரத்தில் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். தமது இந்த ஆர்ப்பாட்டப் பேரணிக்கு நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் பல ஆயிரக்கணக்கானோரைத் திரட்டிவர ஜே.வி.பி. சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளதாக் கூறப்படுகின்றது.

## வரதர் அணியின் உறுப்பினர் கைது!

கொழும்பு,ஜூன்14

வவுனியா, குருமண்காடு பகுதியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்தின் மீது கடந்த 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதலில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணியைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக்காலை பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருமண்காடு ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் வைத்துப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்ட இவரைப் பொலீஸார் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர் என்றும் மேலதிக தகவல்களை வெளியிட பொலீஸார் மறுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# திருமலை புத்தர் சிலை விவகாரம்: ஓக.3 வரை வழக்கு ஒத்திவைப்பு

திருமலை நகரில் அமைக்கப்பட்ட சர்ச்சைக்குரிய புத்தர் சிலை குறித்த வழக்கு விசாரணை ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதிக்கு நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கின் எதிராளியான திருகோணமலை ஓட்டோ சங்கச் செயலாளர் அம்பலாங்கொட கீர்த்தி ஜெயலால் என்பவர் நேற்று நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கவில்லை. திருமலை நகர சபை செயலாளர் விபுலானந்தன் மாத்திரமே சமுகமளித்திருந்தார்.

அரச தரப்பு சட்டத்தரணி எஸ்.ஹலீம்தினின் எழுத்து மூல விண்ணப்பத்திற்கு அமைய நீதிபதி வழக்கு விசாரணையை ஓகஸ்ட் மாதத்திற்கு ஒத்திவைத்தார். இது தொடர்பாக அரச தரப்புச் சட்டத்தரணியிடம் கருத்துக் கேட்டவேளை அவர் தெரிவித்ததாவது:-

வழக்கில் சம்பந்தப்பட்டிருந்த ஓட்டோ சங்கத்தின் செயலாளர் இன்று நீதிமன்றத்திற்குச் சமுகமளிக்கவில்லை. அவருக்கான அழைப்பாணை மற்றும் புத்தர் சிலை உள்ள பகுதியில் கட்டுமானப் பணிகளைத் தடுப்பதற்கான நீதிமன்றக் கட்டளை ஆகியவை இதுவரையும் அவருக்கு அனுப்பப்படவில்லை. அதனை அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. மேற்படி விடயங்களை நீதிபதிக்கு எழுத்துமூலம் சமர்ப்பித்ததிற்கமைவாக அவர் மேற்படி வழக்கிற்கான தவணையை ஓகஸ்ட் மாதம் மூன்றாம் திகதி என்று அறிவித்துள்ளார் எனத் தெரிவித்தார்.

அதேசமயம், சிலை அமைந்துள்ள பகுதியில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு எதிரான இடைக்காலத் தடை உத்தரவையும் ஓகஸ்ட் மாதம் 3ஆம் திகதி வரை நீதிபதி நீடித்தார்.

இதேவேளை -

புத்தர் சிலை விவகாரம் தொடர்பாகச் சமரச முயற்சிகளை மேற்கொள்ள பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தலைமையிலான குழு ஒன்று இன்று கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு வருகின்றது. அக்குழு இரு தரப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளது.

எனினும், சிலையை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்த தமிழர் தரப்பு விதித்திருந்த காலக்கெடு நாளையுடன் முடிவடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பொதுக்கட்டமைப்புக் காரணமாக அரசு கவிழ ஐ.தே.க. இடமளிக்காது என ரணில் உறுதி

## ஜனாதிபதி சந்திரிகாவிடம் நேரில் தெரிவிப்பு

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காகப் பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கப்போய் அந்தக் காரணத்திற்காக ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான தற்போதைய ஆட்சி கவிழ்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இடமளிக்காதென்றும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதிக்கு முழுமையான ஆதரவை ஐ.தே.க. வழங்குமென்றும் ஐ.தே.க. தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்திருக்கின்றார் என அறியவருகின்றது.

நேற்றுப் பிற்பகல் மூன்று மணியளவில் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை ஐ.தே.க. தலைவர் சந்தித்தார். 40 நிமிடநேரம் மட்டுமே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

உத்தேசப் பொதுக்கட்டமைப்புக் குறித்து எதிர்க்கட்சித் தலைவருக்கு இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி விரிவாக விளக்கியிருக்கிறார். ஆனால், பொதுக்கட்டமைப்பின் நகல் பிரதியெதுவும் ஐ.தே.க. தலைவருக்கு வழங்கப்படவில்லையென ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் கூறின.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தினால் எழுந்துள்ள தற்போதைய பரபரப்பான அரசியல் சூழ் நிலை குறித்து ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவரும் மனம்விட்டுக் கலந்துரையாடியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது. ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசின் மீதான எதிர்ப்புகள் ஐ.தே.கவிற்கு இருந்தாலும் இந்தப் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசின் செயற்பாடுகளுக்குக் கட்சியின் ஆதரவு உண்டென்றும் ரணில் அங்கு குறிப்பிட்டுள்ளார் எனத் தெரிகின்றது.

பொதுக்கட்டமைப்பொன்றைச் செய்யப்போய் அதற்காக அரசு கவிழ்வதைத் தமது கட்சி முற்றாக விரும்பவில்லையென்றும் இந்த விடயத்தில் ஜனாதிபதி கோரினால் நாடாளுமன்றத்திற்குள்ளேயும், வெளியேயும் தமது கட்சியின் முழு ஆதரவையும் வழங்கத் தயாராக உள்ளதாகவும் ரணில் அங்கு மேலும் தெரிவித்துள்ளார் என அறியவந்தது.

# டக்ளஸ் வவுனியாவுக்கு விஜயம்

வவுனியா,ஜூன்14

இந்துசமய கலாசார அமைச்சரும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா கடந்த ஞாயிற்றுக்கிழமை சத்தம் சந்தடியின்றி வவுனியாவுக்கு வந்து திரும்பியுள்ளார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அவரது வவுனியா விஜயம் குறித்து அவர் வவுனியாவை வந்தடைவதற்கு 5 நிமிடங்கள் முன்னரே பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

வழமையாக அமைச்சர் ஒருவர் வவுனியாவுக்கு வருகைதருவதாக இருந்தால் அதுபற்றி முன்கூட்டியே பொலீஸாருக்கு அறிவிக்கப்படும். பொலீஸாரும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வார்கள். ஆனால், அமைச்சர் டக்ளஸின் விஜயத்தின்போது அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை.

கடந்த சனிக்கிழமை குருமண்காட்டில் கிளைமோர் தாக்குதலுக்கு உள்ளான ஈ.பி.டி.பி. முகாமுக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ், அங்கு உயிரிழந்த தமது இயக்க உறுப்பினருக்கு அஞ்சலி செலுத்தினார். அதன்பின்னர் தமது கட்சி முக்கியஸ்தர்களைச் சந்தித்துப் பேசினார்.

அதன்பின்னர் அன்றே அவர் கொழும்பு திரும்பினார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

இதேவேளை -

ஈ.பி.டி.பி. கட்சி உறுப்பினர் ஒருவர் கிரனேட்டுடன் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். அமைச்சர் டக்ளஸ் வவுனியாவுக்கு விஜயம் செய்த அதே தினத்திலேயே இவர் கைதுசெய்யப்பட்டார்.

ஞாயிறு மாலை வவுனியா காமினி வித்தியாலயத்திற்கு முன்பாக வைத்து இவர் கைது செய்யப்பட்டார் என்று பொலீஸார் கூறினர். கடந்த சனிக்கிழமை கிளைமோர் தாக்குதலுக்கு இலக்கான முகாமில் இருந்து 200 மீற்றர் தொலைவில் அந்த இடம் உள்ளது.

கடந்த சனிக்கிழமை கட்சி அலுவலகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் உயிரிழந்த ஈ.பி.டி.பி. உறுப்பினரின் இறுதிச் சடங்கு இன்று நடைபெறவுள்ளது. (க)

## மர்மப்பொருள் வெடித்துக் காயம்!

தென்மராட்சி,ஜூன்14

மர்மப் பொருள் வெடித்து குடும்பஸ்தர் காயமடைந்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வடக்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

காணியொன்றைத் துப்புரவு செய்தபோது மர்மப்பொருள் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த மட்டுவில் வடக்கைச் சேர்ந்த சின்னத்துரை சிவராசா (வயது 44) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். (ஒ-117)

# கலவர நிலையை உருவாக்க சில சக்திகள் முயற்சிக்கின்றன?

கொழும்பு,ஜூன்14

நாட்டில் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையைப் பயன்படுத்தி குழப்பமான - கலவர நிலைமை ஒன்றை - உருவாக்க சில அரசியல் சக்திகள் முயல்வதாகவும் இது பாரதூரமான விளைவுகளைத் தோற்றுவிக்குமென்றும் அரச தேசிய புலனாய்வுத்துறை அரச தலைமைத்துவத்திற்கு அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் தற்போதைய பாதுகாப்பு நிலை தொடர்பில் இரகசிய அறிக்கையொன்றை தேசிய புலனாய்வுத்துறை ஓரிரு நாள்களுக்கு முன்னர் அரச தலைமைத்துவத்திற்குச் சமர்ப்பித்தது என அறியவருகின்றது.

தற்போதைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், அதனைப் பயன்படுத்தி மக்களுக்கு உணர்ச்சியைத் தட்டிவிடும் கருத்துக்களைப் பரப்பி, குழப்ப நிலையை ஏற்படுத்த சில அரசியற் கட்சிகளும், சில அமைப்புகளும் முயல்கின்றன எனவும், இதனால் சட்டம் - ஒழுங்கு, அமைதி குலைந்துபோகும் அபாயம் இருப்பதாகவும் புலனாய்வுத்துறையின் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பெரும் கலவரமொன்று ஏற்படுவதற்கு வழிவகுக்கும் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த உடனடி முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கை அரச தலைமைத்துவத்தை வலியுறுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய-பாக்.சமாதானத்திற்காக எல்லையை விட்டுத்தர முடியாது

## இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

சியாச்சின்,ஜூன்14

இந்திய - பாகிஸ்தான் நாடுகளுக்கிடையில் அமைதி நிலவவேண்டும். ஆனால், அதற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது. எல்லையைவிட்டுத் தரவும் முடியாது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

மூன்று நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கடந்த சனிக்கிழமை காஷ்மீர் சென்ற பிரதமர், உலகின் மிக உயர்ந்த யுத்தகளம் என வர்ணிக்கும் சியாச்சின் பனிமலைச் சிகரத்திலுள்ள இராணுவத்தினர் முன் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது:-

உலகின் மிக உயர்ந்த சண்டைக்களம் என்று கூறப்படும் இந்தப் பகுதியை அமைதிப் பகுதியாக மாற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்திய - பாகிஸ்தான் இடையே அமைதி நிலவவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அதற்காக அங்கீகரிக்கப்பட்ட எல்லையில் எந்த மாற்றமும் செய்யப்படமாட்டாது எல்லையை விட்டுத்தரவும் முடியாது.

இந்த எல்லையைப் பாதுகாப்பது நாட்டின் பாதுகாப்புக்கு மட்டுமல்ல கௌரவத்திற்கும் அவசியம். இதற்காகத்தான் இந்திய இராணுவத்தினர் சிரமமான சூழ்நிலையைப் பொறுத்துக் கொண்டு எல்லையைக் காத்து வருகின்றனர்.

மிகவும் சிரமமான சூழ்நிலையில் இங்கு எல்லையைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறீர்கள். உங்கள் தியாகத்தையும் தேசப்பற்றையும் நாடே போற்றுகிறது. இந்தச் சூழ்நிலையை நேரடியாகப் பார்க்கவேண்டும். உங்களுடைய வாழும் சூழ்நிலையைக் கண்டறிந்து தேவைகளை நிறைவேற்றித்தர அரசால் என்ன செய்யமுடியும் என்று முடிவெடுப்பதற்காகவே ஆவலுடன் நான் இங்கு வந்தேன்.

உங்களுடைய கஷ்டங்களை குறைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும். அதற்காக நாட்டின் பாதுகாப்பில் எந்த சமரசமும் செய்யமுடியாது. நாட்டின் பாதுகாப்பே நமக்கு முக்கியம் என்றார்.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 12 ஆயிரம் அடி உயரத்தில் இருக்கும் சியாச்சின் பனிமலைச் சிகரத்திற்கு முதன்முதலாக சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் என்பது குறிப்பிடத்தக்கது. (த-க)

### சார்க் மாநாடு நவம்பரில் நடக்கும்

இஸ்லாமாபாத்,ஜூன்14

தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு (சார்க்) மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 12ஆம், 13ஆம் திகதிகளில் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் நடைபெறும்.

இந்த அமைப்பின் தலைவராக இருக்கும் பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் கடந்த சனிக்கிழமை இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இலங்கை, நேபாளம், மாலைதீவு ஆகியன இதில் அங்கம் வகிக்கின்றன.

கடந்த ஜனவரியில் இந்த மாநாடு நடப்பதாக இருந்தது. இந்தியா, இலங்கையில் சுனாமி தாக்குதல் காரணமாக அது ஒத்தி வைக்கப்பட்டது.

பின்னர் பெப்ரவரியில் இம்மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது நேபாளத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை நீக்கி விட்டு ஆட்சி அதிகாரத்தை மன்னர் ஞானேந்திரா தமது கையில் எடுத்துக் கொண்டார். இதையடுத்து மாநாடு நடத்தப்படவில்லை. (த)

உலக அரங்கில்

## ஆப்கானில் குண்டுவெடிப்பு 5 அமெ. படையினர் பலி!

காபூல்,ஜூன்14

மேற்கு ஆப்கானிஸ்தானில் கந்தகார் எனும் இடத்தில் அமெரிக்க இராணுவ வாகனமொன்றில் சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் 5 அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று இந்தக் குண்டுவெடிப்பு நிகழ்ந்ததெனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானில் கடந்த மார்ச்மாதம் முதல் இடம்பெற்றுவரும் தீவிரவாத வன்செயல்களில் இதுவரை 13 அமெரிக்கப் படையினர் உயிரிழந்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர். ஜூன் முதலாம் திகதி ஆப்கானில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-க)

## ஜேர்மனியில் மரக் குடியிருப்புகள்

ஜேர்மனியில் உள்ள டார்ட்மண்ட் நகரம் உட்பட 12 நகரங்களில் அடுத்த ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடக்கிறது.

இதைப் பார்ப்பதற்காக உலகம் முழுவதிலும் இருந்து உதைபந்தாட்ட ரசிகர்கள் டார்ட்மண்ட் வர இருக்கிறார்கள். இதேவேளை, 40 ஆயிரம் விலை மாதர்களும் டார்ட்மண்ட் வரஇருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு மறைவிடங்களை ஏற்படுத்தித் தருவதற்காக 'மரத்தினாலான குடியிருப்புகளை' ஏற்படுத்தித் தரும் பணியில் ஜேர்மன அரசு ஈடுபட்டிருக்கிறதாம். (த)

## ஜேர்மன் நாட்டில் சவப்பெட்டிக் கண்காட்சி

ஜேர்மனி நாட்டில் காசெல் நகரில் சவப்பெட்டிகளின் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இங்கிலாந்து நாட்டு நிறுவனம் ஒன்று தயாரிதத சவப்பெட்டிகள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை கண்காட்சி நடைபெறும்.

'ஸ்போட்ஸ் பாக்' கிற்றார், படகு போன்ற வடிவங்களில் சவப்பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

மக்களின் விருப்பத்துக்கு ஏற்ப இந்தச் சவப்பெட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளன - என்று இதனைத் தயாரித்த நிறுவனம் தெரிவித்தது. (த)

## உழைத்து வாழவிரும்பும் ஜப்பானிய முதியவர்கள்

ஜப்பான்,ஜூன்14

ஜப்பானில் உள்ள 55 வயது முதல் 69 வயது வரையுள்ள முதியவர்களில் 30 சதவீதம் பேர் முதுமை பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து வேலைசெய்து சம்பாதிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அந்த நாட்டின் தொழிலாளர் நலத்துறை அமைச்சகம் முதியவர்களிடம் நடத்திய ஆய்வில் இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இளமைக்காலத்திலேயே உழைப்பதற்குப் பின்னடிக்கும் எமது நாட்டவர்களுக்கு இது சமர்ப்பணம்... (த)

## சிம்ரனுக்கு ஆண் குழந்தை



புதுடில்லி,ஜூன்14

நடிகை சிம்ரானுக்கு ஆண்குழந்தை பிறந்துள்ளது. கடந்த வருடம் தீபக் என்ற உறவினர் ஒருவரை அவர் திருமணம் செய்துகொண்டார்.

அவர் கணவருடன் டில்லியில் வசிக்கிறார். நேற்றுமுன்தினம் சிம்ரனுக்குப் பிரசவவலி ஏற்பட்டது. உடனடியாக அவரைக் கணவர் தீபக்கும், உறவினர்களும் அருகில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

அங்கு சிம்ரனுக்கு ஆண்குழந்தை பிறந்தது. சிம்ரனும் குழந்தையும தற்போது ஆஸ்பத்திரியில் உள்ளனர். இன்னும் ஓரிரு நாள்களில் வீட்டுக்கு இருவரும் செல்கின்றனர்.

குழந்தை பிறந்த தகவல் அறிந்ததும் நடிகர், நடிகைகள் நேரிலும் தொலைபேசியிலும் சிம்ரனுக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். பஞ்சதந்திரம், துள்ளாதமனமும் துள்ளும், கண்ணெதிரே தோன்றினாள் உட்படப் பல படங்களில் கதாநாயகியாக நடித்து ரசிகர்களின் ஆதரவைப் பெற்றவர் சிம்ரன். (த)

## தண்டவாளத்தில் குண்டு வெடித்தது; ரயில் தடம்புரண்டு 12 பேர் படுகாயம்!

### ரஷ்யாவில் நேற்றுச் சம்பவம்

மொஸ்கோ,ஜூன்14

ரஷ்யாவில் தண்டவாளத்தில் குண்டு வெடித்ததில் ரயில். ஒன்று தடம்புரண்டது. இதில் 12 பேர் படுகாயமடைந்தனர். நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

செச்சினிய தலைநகர் குரோஸ்னியில் இருந்து மொஸ்கோ நோக்கி ஒரு பயணிகள் ரயில் சென்றுகொண்டிருந்தது. மொஸ்கோவுக்கு தெற்கே 150 கிலோமீற்றர் தூரத்தில் அந்த ரயில் வந்தபோது தண்டவாளத்தில் திடீரெனறு குண்டு வெடித்தது.

குண்டு வெடித்த இடத்தில் 10 அடி நீளத்துக்கு பெரிய பள்ளம் ஏற்பட்டது. இதனால், அந்த ரயிலின் 2 பெட்டிகள் தடம்புரண்டன. குண்டு வெடித்ததிலும் ரயில் பெட்டிகள் கவிழ்ந்ததிலும் ஒரு சிறுமி உட்பட 12 பேர் காயம் அடைந்தனர். இதில் சிலர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் ரஷ்யா தனது தேசிய தினத்தை கொண்டாடியது. மொஸ்கோ உட்பட பல்வேறு நகரங்களில் கோலாகல நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. இந்த நிகழ்ச்சிகளின் போது செச்சினிய தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதைத் தடுக்க பலத்த பாதுகாப்பு போடப்பட்டு இருந்தது. அதையும் மீறி இந்த ரயில் கவிழ்ப்பு வேலை நடந்துள்ளது.(த)

## 45 கோடி ரூபாவுக்கு விற்கப்பட்ட மேசை

இத்தாலிய நாட்டில் செய்யப்பட்ட கண்ணாடி மேசை ஒன்று 45 கோடி ரூபாய்க்கு (இலங்கை மதிப்பில்) விற்கப்பட்டுள்ளது. இது திமிங்கிலத்தின் எலும்புக்கூடு போல தோற்றமளிக்கிறது. உலகிலேயே மிக அதிகமான விலைக்கு விற்கப்பட்ட மேசை இதுவாகும்.

இதற்கு முன்பு 22 கோடி ரூபாய்க்கு ஒரு மேசை விற்கப்பட்டது. (த)

## ஈரானில் குண்டு வெடித்து 8 பேர் பலி!

தெஹ்ரான்,ஜூன்14

ஈரான் நாட்டின் தென்மேற்கு பகுதியில் உள்ள குசெஸ்தான் மாநிலத்தின் தலைநகர் ஆவாஸ் நகரில் 4 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதில் 4 பெண்கள் உட்பட 8 பேர் பலியானார்கள்; 36 பேர் காயமடைந்தனர்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை அங்கு ஜனாதிபதித் தேர்தல் நடக்கிறது. இதில் பொது மக்கள் கலந்துகொண்டு வாக்களிக்கவிடாமல் தடுப்பதற்காகத்தான் இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் நடத்தப்பட்டதாக மாநில துணை ஆளுநர் ஷரியாட்டி கூறினார்.

குசெஸ்தானில் அரேபியர்கள், அரேபியர் அல்லாதவர்களின் சதவீதத்தை மாற்றுவதற்காக நடந்த முயற்சிகளை எதிர்த்துப் போராட்டங்கள் நடந்தன. இதைத் தொடர்ந்துதான் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அரசுக் கட்டடங்களைச் சேதப்படுத்தும் நோக்கத்தோடு இந்த வன்முறைச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்டன. குண்டுகள் வெடித்ததில் சாலைகளில் நிறுத்தப்படிருந்த பல கார்கள் சேதமடைந்தன. (த)


உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation

New way of flying
Head office
No.500,Galle Road, Wellawatte, Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road, Jaffna. Tel:021-2226242 Fax:021-2225600
Branch
No:14,New Market Building Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road, Trincomalee.
Tel:026-2221519 Fax:026-2221519
யாழ்⇆கொழும்பு | யாழ்⇆திருகோணமலை⇆கொழும்பு






இந்தியாவில் கல்வி கற்க அரிய வாய்ப்பு !

பின்வரும் இள நிலை கற்கை நெறிகளை தென்னிந்தியாவின் நாமக்கல் மகேந்திரா கலை விஞ்ஞான கல்லூரியில் (ISO 901 - 2000 Certified) நியாயமான மிகக் குறைந்த கட்டணத்தில் பெற்றிடுவீர் !!

* B. Computer Application * B Sc Bio Technology * B Sc Micro Biology * B Sc Nutrition & Dietics * B Com
* B Com (Computer Application) * B Sc Physics * B Sc Maths * B Sc Chemistry * BComputer Application * B Sc Computer Science

NN CONSULT - இல. 60 [முதல் மாடி] பீற்றர்சன் லேன், வெள்ளவத்தை. கொழும்பு - 06.
தொலைபேசி : 011-5558833, தொலைநகல் : 011-5558844, மின்அஞ்சல் : nnconsult@sltnet.lk

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்




61, மருதடி வீதி,யாழ்ப்பாணத்தில் வசிக்கும் **பன்னீர்ச்செல்வன் – ஜெயரஞ்சினி** தம்பதியினரின் செல்வப் புதல்வன் **விநோஷ்** தனது முதலாவது பிறந்த நாளை சுழிபுரத்தில் இன்று (14.06.2005) செவ்வாய்க்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, மாமா, சின்னமாமா, சித்தி, பெரியப்பா குடும்பம் (U.K.), பாமினி அத்தை குடும்பம் (U.K ), குமுதினி அத்தை குடும்பம் (U.K.), சாந்தனி அத்தை குடும்பம் (U.K.), லண்டனிலுள்ள மச்சாள்மார், அக்கா, அண்ணன் அனைவரும் பல்கலையும் கற்று சகல சௌபாக்கியங்களுடன் சுழிபுரம் ஈஸ்வர விநாயகர் அருள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். (36519)(26-18-34) தகவல்: அம்மப்பா, ந.ஜெயரஞ்சன்.

## தவறிவிட்டது

*திருமதி நீ.பினாகபாணி* என்பவரது வைத்திய ஆவணங்களும் உடுதுணிகளும அடங்கிய (மேலே P.N. எனக் குறியீடு இடப்பட்ட) கறுப்பு நிறப் பயணப்பை (கட்பாக்) யாழ்.நகரிலிருந்து 09-06-2005 இல் கொழும்பு சென்றபோது வானில தவறிவிட்டது. யாராவது தவறுதலாக மாறி எடுத்தவர்கள் வைத்திருப்பின் கீழேயுள்ள விலாசத்தில் ஒப்படைத்து உதவினால் நன்றியாக இருப்போம். வைத்திய ஆவணங்களுக்காகவே இந்த அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

**திருமதி நீ.பினாகபாணி**, 62/2, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். T.P.: 6135402.

(36539) (26-11-13)

## கடை வாடகை விளம்பரம் வாபஸ் பெறப்படுகிறது

கடந்த 03-06-2005 உதயன் நாளிதழில் 12ஆம் பக்கத்தில் வெளியான -

கடை வாடகைக்குக் கொடுக்கப்படும் என்ற விளம்பரத்தைத் தவறுதலாகப் பிரசுரித்துவிட்டோம். ஆகவே, அந்த விளம்பரம் வாபஸ் பெறப்படுகிறது.

அதன்படி யாழ்.நவீன சந்தை மேல்மாடிக்கடை வாடகைக்குக் கொடுக்கப்படமாட்டாது என்பதைச் சகல பொதுமக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றோம். இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகின்றோம்.

**சீவம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**

நவீன சந்தை, 14A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(36537)(26-11-13)

## கேள்வி அறிவித்தல்

கைதடி, இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசாமி ஆலயத்திற்குப் பின்வரும் வேலைகளைச் செய்வதற்கு கேள்விகள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

இந்த வேலைகளுக்குரிய பொருள்கள் ஆலய பரிபாலன சபையினரால் வழங்கப்படும். கூலிக் கொடுப்பனவிற்குரிய மொத்தப் பெறுமதி கேள்விக்காரரால் குறிப்பிடப்படவேண்டும். குறிப்பிட்ட வேலைகளைச் செய்வது சம்பந்தமாக வேலைகளை நேரில் பார்வையிட்டுக் கேள்விகளை 17.06.2005 பிற்பகல் 4.00 மணிக்கு முன்னர் ஆலய பரிபாலன சபையின் செயலாளரிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேள்விகள் 17.06.2005 பிற்பகல் 5 மணிக்குத் திறக்கப்பட்டுப் பரிசீலிக்கப்படும்

**வேலையின் விவரம்**

வேலை: 1. ஆலயத்தின் உள்கொட்டகை, பீலி வேலை செய்தல் மற்றும் ஓடுகள் மாற்றுதல்.
2. தேர்க்கொட்டகை படிகளுக்கு மேல் கூரை போடுதல்.

ச.வீரசிங்கம்
கௌரவ செயலாளர்,
பரிபாலன சபையினருக்காக.

(C/43392)(21-11-13-26)

## விண்ணக வாழ்வின் முதலாம் வருட நினைவும் கண்ணீர் அஞ்சலியும்



மண்ணில்
25 - 11 - 1954

விண்ணில்
14 - 06 - 2004

திருமதி

**பத்திமா பற்றிசியா நவமணி ரவீந்திரகுமார்**

(ஆசிரியை)

*"ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே*
*மரணத்திலும் மறவாதீர்கள்"*

ஆண்டொன்று சென்றதம்மா!
நீர் எம்மை விட்டுச்சென்று
ஆனாலும் செல்லவில்லை
உம் நினைவு எமைவிட்டு.

*தங்கள் பிரிவால் துயருறும்:*
கணவர், மகள், மருமகன், உறவினர்.

99/6, சந்தான மாதா கோயில் லேன், யாழ்ப்பாணம். (36542)(26-11-13)

## நீர்வேலி விவசாயிகளுக்கு வலுவூட்டல் பயிற்சி வகுப்பு

கோண்டாவில்,ஜூன்14

நீர்வேலிப் பகுதி விவசாயிகளுக்கான வலுவூட்டல் பயிற்சி வகுப்பு அண்மையில் நீர்வேலி வாழைக்குலைச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வாழை, தென்னைப் பயிர்ச்செய்கையும், அதில் ஏற்படும் நோய்த்தாக்கமும் அதனைக் கட்டுப்படுத்தும் முறைபற்றிய விரிவுரைகளும் இடம்பெற்றன.

வாழைப்பயிர்ச்செய்கைகள் தொடர்பாக உடுவில் கமநலசேவை நிலைய விவசாய போதனாசிரியர் எஸ்.சிவனேசனும், தென்னைப் பயிர்ச்செய்கை தொடர்பாக யாழ்மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ.சத்தியேந்திரனும் விரிவுரையாற்றினர்.

பயிற்சி வகுப்பில் அப்பகுதி விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

இந்த வலுவூட்டல் பயிற்சி வகுப்பை நீர்வேலி விவசாய சம்மேளனத்துடன் இணைந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடத்தியிருந்தது. (எ-49)

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

வேலணை மேற்கு, பெரியபுலம் ஸ்ரீ மகா கணபதிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவின் போது தினமும் 'கம்பராமாயணம்" என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவாற்றிய கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வைநித்தியானந்த சர்மா அண்மையில் கௌரவிக்கப்பட்டார்.

ஆலய நிர்வாகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கௌரவிப்பு விழாவில் சொற்பொழிவாளர் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார். (த-13)

## கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்க

வலி.தென்மேற்கு,ஜூன்14

வலி.தென்மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவைப் பெறுபவர்களுக்கும் மற்றும் காசநோய், புற்றுநோய் ஆகியவற்றுக்கான கொடுப்பனவை பெறுபவர்களுக்கும் ஜூன் மாதத்திற்கான கொடுப்பனவு அந்தந்த தபால் அலுவலகங்களுக்குப் பிரதேச செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தத்தமது பிரிவு தபால் அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு இக்கொடுப்பனவை பெற்றுக்கொள்ள முடியும் என்று பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-135)

## கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு,ஜூன்14

சில்லாலை தெற்கு, கிராம அலுவலர் பிரிவில் மேற்கொள்ளப்படவுள்ள 'நியாப்' II திட்டத்தின் மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை சில்லாலை சாந்தை சிற்றம்பலம் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் நியாப் திட்டப்பிரதிப் பணிப்பாளர் உட்படப் பலர் கலந்துகொள்வர். (த-135)

## விவசாயக் குழுக் கூட்டம்

வலி.தென்மேற்கு,ஜூன்14

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச விவசாய குழுக்கூட்டம் நாளை மறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இப்பிரதேச செயலகப் பிரிவிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்களுக்கு கடிதமூலம் அறிவித்தல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (த-135)

## கரும்புலிகள் நா[illegible]யொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடத்தும் கவிதைப் போட்டி – 2005

நிபந்தனைகள்:
1. தேசவிடுதலையை மையமாகக் கொண்டு படைப்புகள் ஆக்கப்படவேண்டும்.
2. 30 வரிகளுக்குக் குறையாமலும் 40 வரிகளுக்கு மேற்படாமலும் படைப்புகள் அமையவேண்டும்.
3. வயது வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

கவிதைகள் யாவும் 25-06-2005 இற்கு முன்பாக வந்து சேரவேண்டும். வெற்றியீட்டும் படைப்புகளுக்குப் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படும்.

படைப்புகள் வந்து சேரவேண்டிய முகவரி:
கவிதைப் போட்டி - 2005
தலைமைச் செயலகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(36545)(26-11-13)

## வடக்கு – கிழக்கு மாகாணசபை உத்தியோகத்தர்களின் சேவை தொடர்பாக நிறைவேற்றப்படாத விடயங்கள்

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் தற்போது சேவையாற்றுகின்ற, சேவையாற்றி ஓய்வுபெற்ற, வேறு மாகாண/மத்திய அரசிற்கு மாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களின் தாபன விடயங்கள் பல நிறைவேற்றப்படாது உள்ளமை எனது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

எனவே, இதனை நிவர்த்தி செய்யும்பொருட்டு தங்களின் சேவை தொடர்பாக நிறைவேற்றப்படாத விடயங்கள் ஏதும் இருப்பின் அது சம்பந்தமான விவரங்களை கீழ்வரும் மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்து 2005.07.15 ஆம் திகதிக்கு முன்னர் *செயலாளர், மாகாண பொதுநிர்வாக அமைச்சு, பிரெட்டறிக் கோட்டை, திருகோணமலை* என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

01. முழுப்பெயர்:
02. தற்போதைய சேவை:
03. தற்போதைய சேவை நிலையம்:
04. தற்போது இம்மாகாண சேவையில் இல்லாவிடில்/ஓய்வுபெற்றிருப்பின் இறுதியாகக் கடமையாற்றிய சேவை நிலையம் போன்ற விவரம்:
05. சுயவிவரக்கோவை இலக்கம்:
06. நிறைவேற்றப்பட வேண்டிய தாபன விடயத்தின் சுருக்கம்: (உதவி ஆவணங்கள் இருப்பின் இப்படிவத்துடன் இணைக்கவும்)

..............
கையொப்பம்

குறிப்பு:- தங்களின் சேவை தொடர்பாக நிறைவேற்றப்படாத குறித்த விடயம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவிலோ, மேன்முறையீட்டு நீதிமன்றிலோ, மனித உரிமை ஆணைக்குழுவிலோ சமர்ப்பித்து முடிவு வழங்கப்பட்டிருப்பின் அல்லது அரசியல் பழிவாங்கல் தொடர்பாகவோ முறைபீடு செய்யப்பட்டிருப்பின் அவ்விடயம் தொடர்பாக இவ்வறிவித்தலின் கீழ் விண்ணப்பிக்கமுடியாது என்பதைக் கவனத்திற்கொள்ளவும்.

**எஸ்.ரங்கராஜா,**
பிரதம செயலாளர்,
வடக்கு - கிழக்கு மாகாணம்.

(சி/43391)(32-11-13-26)

## துயர் பகிர்கின்றோம்



அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்க யாழ். கிளையின் யாழ்ப்பாண அஞ்சல் அலுவலக அங்கத்துவ சகோதரர்

கு.நகுலேஸ்வரன்

அவர்களின் அன்புத் தந்தை

**பாலன் குமாரு**

அவர்களின் மரணச் செய்திகேட்டு நாம் மிகவும் துயரமடைவதோடு, அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினரின் துயரை நாமும் பகிர்ந்துகொள்கின்றோம்.

அகில இலங்கை அஞ்சல் தந்தித் தொடர்புகள் சேவையாளர் சங்கம், யாழ்.மாவட்டம்.

தலைவர், செயலாளர், நிர்வாகிகள், அங்கத்துவ சகோதரர்கள்.

(36541)(26-11-13)

## 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்



மண்ணில்
19 - 01 - 1943

விண்ணில்
16 - 05 - 2005

அமரர்

**பஞ்சாட்சரம் சரஸ்வதி**

(களபூமி - காரைநகர்)

16-05-2005 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் நினைவாக இன்று (14-06-2005) செவ்வாய்க்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறும் 31ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்விலும் மற்றும் அந்தியேட்டி நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

களபூமி,
காரைநகர்.

- குடும்பத்தினர்.

(சி-43394)(26-11-13)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# அநியாயம் செய்வதாக நினைத்து நியாயம் செய்யும் பேரினவாதம்

அரசியல், இராணுவ ரீதியில் மிகவும் பலங்கொண்ட சக்தியாக - வலிமைமிக்க ஒரு தலைமையின்கீழ் - ஈழத்தமிழர்கள் இன்று எழுந்து நிற்கின்றார்கள். உலகம் உணர்ந்துகொண்ட உண்மை இது.

இதைப் புரிந்துகொள்ளாமல் இனிமேலும் தமிழர் நலனுக்கான விடயங்களைப் புறந்தள்ளி, தமிழரை ஏமாளியாக்கி, அவர்களுக்கு நியாயம் செய்யாமல் தமது பௌத்த - சிங்கள மேலாண்மைவாதப் போக்கை அவர்கள் மீது திணிக்கலாம் எனப் பேரினவாதிகள் கனவு காண்பார்களேயானால் - அந்த வழியில் தமது இனவெறிப் போக்கைத் தொடர்வார்களேயானால் - விளைவுகள் விபரீதமாகும்.

யாழ்ப்பாணத்தில் பொது அமைப்புகள் பல, பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக இலங்கை அரசினதும், ஜனாதிபதியினதும், தென்னிலங்கை அரசியல் தலைமைகளினதும் போக்கைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. அவற்றில் தெரிவிக்கப்படும் சாராம்சம்தான் மேற்கூறப்பட்ட எச்சரிக்கையாகும்.

தான் செல்லும் வழித்தடத்தின் மோசம் புரியாமல், மீண்டும் திரும்பிவர முடியாத ஒரு திசையில் நகர்ந்துகொண்டிருக்கிறது பேரினவாதம்.

தனித்துவமான இனக்கட்டமைப்பையும், தாயகத்தையும், மொழியையும், கலாசார விழுமியங்களையும் கொண்டவர்கள் தமிழர்கள். தமக்கெனத் தனிநாடு ஒன்றை உருவாக்கும் சகல அரசியல், இராணுவ மற்றும் இன்னோரன்ன கட்டமைப்புகளை அவர்கள் இன்று கொண்டு விளங்குகின்றார்கள். அத்தகைய தனிநாட்டுக்கான அடிப்படைக் கட்டுமானங்கள் ஏற்கனவே தமிழர் தாயகத்தில் துளிர்விடத் தொடங்கி விட்டன. தனியான சட்டம் - ஒழுங்குமுறைகள், காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள், நீதி - நிர்வாக முறைமைகள், இராணுவம், கடற்படை, விமானப் படை என்று முப்படைகள் எனத் தனிநாட்டுக்கான அத்திபாரங்கள் தமிழர் தாயகத்தில் ஏற்கனவே பலமாகப் போடப்பட்டுள்ளன.

தனியான - இறைமையுள்ள - ஒரு நாட்டை உருவாக்குவதற்கான முயற்சியில் இவ்வளவு தூரம் முன்னேறியுள்ள ஓர் இன மக்களுடன் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வைக் காண முயல்கிறோம் என்ற யதார்த்தத்தைத் தென்னிலங்கை அரசியல் தலைமைகள் மறந்துவிடுகின்றன போலும். அவற்றின் அண்மைக்காலச் செயற்பாடுகளும், அரசியல் கோஷங்களும், கூப்பாடுகளும், போக்குகளும் அவ்வாறு தான் நம்மை எண்ண வைக்கின்றன.

தனிநாடு ஒன்றுக்கான ஆரம்பக் கட்டுமான வேலைகளோடு, அதற்கான கட்டுப்பாட்டுப் பிரதேசங்களோடு, தயாராக இருக்கும் ஓர் இனத்தை, அந்தத் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட வைத்துப் பிணக்குக்கு இணக்கத் தீர்வு காணச்செய்யும் இந்த முயற்சியின் தாற்பரியத்தைத் தென்னிலங்கை அரசியல் முறைமை இன்னும் உணர்ந்ததாக இல்லை.

தமிழர்களுக்குத் தனிநாடு கிடைப்பதை - தங்களுக்கென ஓர் அரசை அவர்கள் உருவாக்கிக் கொள்வதை - தடுக்கும் தனிப்பலமும், வலுவும் ஸ்ரீலங்கா அரசிடம் இருக்கின்றதா என்பது கேள்விக்குறியே. அதைச் செய்வதற்கு சர்வதேச ஆதரவிலும், வலுவிலும், பின்னணியிலும்தான் இலங்கை தங்கியுள்ளது என்ற யதார்த்தம் - அப்பட்டமான உண்மை - தென்னிலங்கைக்கு இன்னுமே புரியாமல் இருப்பது விந்தைதான்.

ஆழிப்பேரலை அனர்த்த மற்றும் மீள்கட்டுமானத்திற்கான பணிகளை முன்னெடுப்பதற்கு தமிழருடன் சேர்ந்து ஒரு நிர்வாக ஏற்பாட்டைக் கூடச் செய்துகொள்ள இணங்காத சிங்கள - பௌத்த பேரினவாதம், இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர்களுக்கு நியாயமான தீர்வைக் கொடுக்கும் என எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவே என்பதை தென்னிலங்கை அரசியல் தலைமைகள் தமது செயற்பாடுகள் மூலம் சர்வதேசத்திற்கும் நிரூபித்து வருகின்றன.

இதுவிடயத்தில் தென்னிலங்கையின் போக்குத் தொடர்பாகக் காலங்காலமாகத் தமிழ்த் தலைவர்கள் கூறிவருவது உண்மை என்பதையும் - அமைதி முறையில் நீதி, நியாயமான தீர்வொன்றை தமிழர்களுக்கு சிங்களம் வழங்காது என்பதையும் -

பேரினவாதிகள் தமது நடவடிக்கைகள் மூலம் சர்வதேசத்துக்கு உறுதிப்படுத்தி தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி வருகின்றார்கள்.

தமிழர்களுக்கு அநியாயம் செய்கின்றோம் என எண்ணிக்கொண்டு இப்படி நடப்பதன் மூலம் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இவர்கள் நியாயப்படுத்துகின்றார்களே என தனியார் ஒலிபரப்புச் சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் மனம் வெதும்புகின்றார் அரசமைப்பு மறுசீராக்கல், நல்லிணக்க அமைச்சர் டி.யூ.குணசேகர.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சரியான அரசியல் நகர்வுகளைச் சமயம் பார்த்து மேற்கொண்டு தென்னிலங்கைச் சிங்களத்தின் உண்மைச்சொரூபத்தை சர்வதேசத்திற்கும் அம்பலப்படுத்த வைத்து தங்களின் போராட்ட நியாயத்தை உணர்த்திய புலிகளின் அரசியல் காய்நகர்த்தல் மெச்சத்தக்கது.

இப்போதாவது சர்வதேச சமூகத்திற்கு விடயம் புரிந்தால் சரிதான்.



அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்களையும் பங்கேற்கச் செய்வதற்கான உள்ளூராட்சி மன்றங்களுக்கூடான செயற்றிட்டம் - 2005இற்கான நிகழ்வு கடந்த வியாழக்கிழமை நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நல்லூர் முருகன் சனசமூக நிலையத் தலைவர் க.குமாரசாமி யாழ். மாநகர சபைச் செயலாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், ஆசிய அபிவிருத்தி வங்கியின் யாழ். குடாநாட்டு நீர்வழங்கல் சுகாதார மேம்பாட்டு நிறுவன உத்தியோகத்தர் திருமதி வி.பழனியப்பன், யாழ். மாநகரசபை சனசமூக நிலைய மேற்பார்வை அதிகாரி து.சோமசுந்தரம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் யாழ். மாநகரசபை பிரதேச சுற்றாடல் அதிகாரி த.ந.சூரியராஜா உரைநிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பகீர்)

# கல்வி அமைச்சின் சகல சுற்றறிக்கைகளும் சமகாலத்தில் தமிழிலும் வெளிவரவேண்டும்

## செயலாளரிடம் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு நேரில் வலியுறுத்து

கல்வி அமைச்சு வெளியிடும் சகல சுற்றறிக்கைகளையும் சமகாலத்தில் தமிழ் மொழியிலும் வெளியிடவேண்டும்.

கல்விச் சேவை சங்கங்களின் கூட்டமைப்பு கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல்லை நேரில் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இலங்கையில் உள்ள முன்னணி ஆசிரியர் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட 12 தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகக்குழுக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவன் முன்வைத்த தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள், கல்வி அமைச்சின் செயலாளர் தாரா டி மெல், மேலதிக செயலாளர் எஸ்.எல்.குணவர்த்தனா ஆகியோரை நேரடியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தமிழ்மொழிமூலம் சுற்றறிக்கைகளை வெளியிடாமையினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் குறித்துத் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் கல்வி அமைச்சின் செயலாளரிடம் எடுத்துக்கூறினர்.

மேற்படி நிர்வாகச் சிக்கல்கள் தீர்த்து வைக்கப்படவேண்டுமானால், கல்வி அமைச்சு வெளியிடும் சகல சுற்றறிக்கைகளும் சமகாலத்தில் தமிழில் வெளியிடப்படவேண்டும் என்று தொழிற்சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

இதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சின் செயலாளர், தமிழ்மொழிமூலமான சுற்றறிக்கையினை வெளியிடுவதில் இதுவரைகாலமும் காலதாமதம் ஏற்பட்டமைக்கு மனவருத்தம் தெரிவித்ததுடன் -

எதிர்காலத்தில் சமகாலத்தில் தமிழ்மொழிமூலமாக சுற்றறிக்கைகளை வெளியிடுவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதிமொழி வழங்கினார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் நிர்வாகச் செயலாளர் எஸ்.சரவணபவன் தெரிவித்தார். (எ-11)

# பதவியை இராஜினாமா செய்யப்போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன்14

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை நிறைவேற்ற இயலாது போகுமானால், தாம் தமது ஜனாதிபதிப் பதவியைவிட்டு விலகிவிடப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள்ளாரென 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அரசின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னரே ஜனாதிபதி இவ்வித கருத்தை வெளியிட்டுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பை உருவாக்க முடியாவிட்டால், தமது நிலை குறித்து நாட்டுமக்களுக்குத் தெரியப்படுத்துவதுடன் இவ்விடயத்தில் தமக்கு இடையூறு ஏற்படுத்தியோர் குறித்தும் ஜனாதிபதி பொதுமக்களுக்குத் தெரிவிக்க விருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதற்கிடையில் ஜனாதிபதி இந்தக் கருத்தை வெளியிட்டதையடுத்து ஜனாதிபதி இவ்விதம் தனித்து முடிவெடுத்தல் தவறானது என்றும் -

கட்சியின் நிறைவேற்றுச் சபையைக் கூட்டியே முடிவு மேற்கொள்வது நியாயமானது என்றும் -

நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்த யோசனையை அங்கிருந்த ஏனைய அமைச்சர்களும் ஆமோதித்தனர் என்றும் -

ஜனாதிபதி அந்தக் கருத்துக்கு உடன்பாடு தெரிவித்ததாகவும் தெரியவருகின்றது என அப்பத்திரிகை வெளியிட்ட செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-205)

# வடக்கு – கிழக்கு அரச அதிபர்கள் கிளிநொச்சியில் ஒன்று கூடுவர்

யாழ்ப்பாணம், ஜூன்14

வடக்கு - கிழக்கு மாகாண அரச அதிபர்களுக்கிடையேயான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி பொது நிர்வாக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரணம் வழங்குதலின் தற்போதையை நிலைமை, நிவாரணம் விநியோகிக்கப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை, இற்றைவரை நிவாரணம் விநியோகிக்கப்பட்ட, மீள்குடியமர்வின் பின்னர் ரூ.25 ஆயிரம் வழங்கப்பட்டு 15 மாதங்கள் வரை தொடர்ந்து நிவாரணம் கொடுக்கப்படவேண்டிய குடும்பங்களின் விவரம், 15 மாதங்களின் பின்னர் உலர் உணவு நிறுத்தப்பட்டதால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட விதவைகள் - ஊனமுற்றோர் - காணாமற்போனோரை அங்கத்தவராகக் கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை போன்ற விடயங்கள் தொடர்பாகவும் -

சமுர்த்தித் திட்ட அமுலாக்கல், சமுர்த்தித் திட்டத்தை அமுலாக்கம் செய்வதற்கு நியமிக்கப்படவேண்டிய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை, ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்தின் கீழ் கொடுக்கப்பட்ட - கொடுக்கப்பட வேண்டிய மீதி இருப்பு என்பன தொடர்பாகவும் -

மத்திய திணைக்களம், மாகாண திணைக்களங்களில் உள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புதல், உதவி அரச அதிபர் பிரிவுகளைப் பிரதேச செயலகங்களாகத் தரமுயர்த்துதல், அபிவிருத்தி வேலைகளை அமுலாக்கம் செய்தல், மாவட்ட ரீதியாக விசேட கவனஞ்செலுத்தவேண்டிய விடயங்கள், பிறவிடயங்கள் என்பன குறித்து விரிவாகக் கலந்துரையாடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-203-204)

## நாளை

ஆனி 01
புதன்கிழமை
15.06.2005
திதி : அட்டமி
பிற்பகல் 04.18 வரை
நட்சத்திரம் : உத்தரம்
முன்னிரவு 11.08 வரை
கரிநாள்
சுபநேரம் : 04.23- 05.53
ராகுகாலம்: 11.53 - 01.23
(யாவும் பழைய நேரப்படி)

# யாழ். மாநகரசபைப் பிரிவில் பத்துக் கிராமங்கள் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஜூன்14

சமூக மீள் நிர்மாணத் திட்டத்தின்கீழ் யாழ். மாநகரசபைப் பிரிவுக்கு உட்பட்ட 10 கிராமங்கள் 20 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த திருநகர், கண்ணபுரம் - மண்பிட்டி, சோலைபுரம் - வில்லூன்றி - கற்குளம், பாஷையூர், மீனாட்சிபுரம் - முத்தமிழ்புரம் - செல்வபுரம், குருநகர், நாவாந்துறை வடக்கு ஆகிய கிராமங்களும் -

நல்லூர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த அரியாலை மத்தி, அரியாலை மத்தி வடக்கு, கந்தர்மடம் - அரசவெளி ஆகிய கிராமங்களுமே இவ்வாறு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன என்று திட்ட நகர முகாமையாளர் க.பரமேஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படி நிதியுதவியுடன் சம்பந்தப்பட்ட கிராமங்களில் உள்ள வடிகால்களைப் புனரமைத்தல், புனரமைக்கப்படாத நிலையில் உள்ள சனசமூக நிலையங்களை மீளமைத்தல், பொது மலசலகூடங்கள் நிறுவுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் - அவர் கூறினார். (எ-ரி)

# வடமராட்சியில் வான் தோண்டும் பணி தற்காலிகமாக நிறுத்தம்

கரவெட்டி, ஜூன்14

வடமராட்சிக் கடற்கரையோரப் பகுதிகளில் நடைபெற்றுவந்த வான் தோண்டும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

வான் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுவந்த துருவி இயந்திரத்தின் ஒரு பகுதி உடைந்துவிட்டது என்றும் -

இதனையடுத்தே வான் தோண்டும் பணிகள் இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசச் செயலாளர் க.சூரியகுமார் தெரிவித்தார். (எ-70)

# கொடிகாமம், வரணி பொதுச்சந்தைகளில் அடிப்படை வசதிகள் போதியளவில் இல்லை

கொடிகாமம், வரணி ஆகிய பொதுச் சந்தைகளில் அடிப்படை வசதிகள் போதாமையினால் பொதுமக்களும் வியாபாரிகளும் வர்த்தகர்களும் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றதாகக் கூறப்படுகிறது.

வரணி பொதுச்சந்தையில் ஒரு மலசலகூடம் உள்ளதால் அதனையே ஆண், பெண் இருபாலாரும் பாவிக்கவேண்டியுள்ளது. இதனால், பெண்கள் இயற்கைக் கடன் கழிப்பதில் பெருஞ்சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

கொடிகாமம் பொதுச்சந்தையிலுள்ள மலசலகூடத்தினுள் செல்லமுடியாத அளவு துர்நாற்றம் வீசுவதாகவும் -

இந்த மலசலகூடம் தினமும் சுத்தம் செய்யப்படுவதில்லை எனவும் - முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.


இரு சந்தைகளும் துப்புரவு செய்யப்படாததால் பொதுமக்கள், வியாபாரிகள் கஷ்டங்களை அனுபவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

## உதயவாக்கு

பொருளற்றவனைக் காட்டிலும் பொருள் உடையவனே அதிகம் துன்பமடைகின்றான்.

- மகாத்மா காந்தி

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**சின்னத்தம்பி செல்லமுத்து**

(இளைப்பாறிய அதிபர்)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 08-02-1927 | 15-05-2005 |

கடந்த 15-05-2005 அன்று அமரத்துவமடைந்த எமது அன்புத் தெய்வம் சின்னத்தம்பி செல்லமுத்து அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் எமக்கு உதவி செய்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (14-06-2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் வீட்டுக் கிருத்தியம் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பத்தினருடன் வருகைதந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

போதரமடம்,
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.

– குடும்பத்தினர்.

(36532) (24-16-13-42)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் அதிபர் **திரு.பெர.கமலநாதன்** அவர்களினதும் எமது நிர்வாக சபை உறுப்பினர் **திரு.பொ.சந்திரநாதன்** அவர்களினதும் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**

அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(ஃ/43386)(42-34-13)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் திரு.பொ.கமலநாதன் அவர்களின் அன்புத்தந்தை

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(ஃ/43386)(42-34-13)

## VACANCY

யாழ்ப்பாணத்தின் பிரபல தனியார் நிறுவனமான SAAMSTECH இன் யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பு அலுவலகங்களில் பணிபுரிய கீழ்வரும் பதவிக்கு வெற்றிடம் உள்ளது.

- DATA COLLECTORS (JAFFNA , ALL ISLAND)
- MARKETING EXECUTIVES (JAFFNA , ALL ISLAND)

எதிர்வரும் 17 அல்லது 18ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் 11 மணிவரை நேரில்வரவும்

(36515)

**SAAMSTECH**

841, HOSPITAL ROAD, JAFFNA. PH.: 021-4591571

### தேர்தலுக்குத் தயாராகுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவு

வெகுவிரைவில் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்குத் தயாராக இருக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தேர்தல் திணைக்கள அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

பொதுத் தேர்தல் தொடர்பான பதிவுகள் அனைத்தையும் முடித்துத் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அவர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார் என்று திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி அண்மையில் தேர்தல் ஆணையாளரை அழைத்து இரகசியமாகப் பேசியிருந்தார். விரைவில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவது குறித்த சாத்தியங்கள் பற்றியே அவர்கள் இருவரும் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் இருந்து ஜே.வி.பி. வெளியேறினால் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-க)

### பருத்தித்துறையில் 'எக்ஸ்றே' பிரிவு மீண்டும் இயங்கும்

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் இயங்காமல் இருந்த 'எக்ஸ்றே' பிரிவு மீளவும் இயங்கவுள்ளது. மேற்படி வைத்தியசாலைக்கு 'எக்ஸ்றே' நிபுணர் நியமிக்கப்பட்டதையடுத்து மேற்படி பிரிவு இயங்கவுள்ளது எனக் கூறப்பட்டது. (எ-78)

### சைக்கிள் இலக்கத் தகடு பெற அறிவுறுத்து

ஊர்காவற்றுறை பிரதேச சபை நாரந்தனை உப அலுவலக எல்லைக்குள் வசிப்பவர்கள் இம்மாத முடிவிற்குள் இவ்வாண்டுக்கான சைக்கிள் இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.(எ-16)


யாழ்-டிண்ணில் முதன் முதலாக அறிமுகம்

WIDE FORMAT PRINTER



only indoor Printing

Out put Media
- Photo Quality Paper
- Stiker Paper
- Coated Paper
- Backlit Vision Film
- Trans Vision Film
- Canvas Paper

4 அடிமுதல் 100 அடிவரை அச்சிடலாம்



புதியவையை அறிமுகம் செய்யும் இன்றைய முன்னோடிகள்.

MOORTHY LAZER DIGITAL COLOUR LAB

JAFFNA ROAD,MANIPAY. T.P.: 021 222 2884.
62/16, STANLY ROAD, JAFFNA. T.P: 071 4168475.


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் திரு.பொ.கமலநாதன் அவர்களின் அன்புத்தந்தை

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**

அவர்களின் மறைவையிட்டு எமது இதய பூர்வமான அஞ்சலியை செலுத்துவதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்,**
**கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(ஃ/43386)(42-34-13)

## 5ஆம் ஆண்டின் நினைவில்



திருமதி **கந்தசாமி தையல்நாயகி**

(மட்டுவில்)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 03-05-1939 | 09-06-2000 |

திதி: 15-06-2005

ஆண்டுகள் ஐந்து போனதம்மா! ஷெல் என்னும் காலன் விட்டுவைக்கவில்லை. உங்கள் நினைவு எங்களை விட்டுப் பிரியவே பிரியாது.

**க.திருஞானசம்பந்தர்**
**குடும்பத்தினர்.**

யாழ்ப்பாணம். (36533)(46-16-13-42)

## 8ஆம் ஆண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 08 – 08 – 1958 | 14 – 06 – 1997 |

**அமரர் அப்பையா ஜெயராசா**

ஆண்டுகள் எட்டு ஆனாலும்
ஆறவில்லை உங்கள் நினைவு!
ஆண்டாண்டு பல சென்றாலும்
உங்களை என்றும் மறக்கமுடியுமா ராசா?

உங்கள் பிரிவால் துயருறும்
**தாய், குடும்பத்தினர்.**

7/1,அன்னசத்திரலேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(36534) (42-13-16)

## உடற்கோப்பு அமைப்பதற்கான கூறுவிலை

வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தினால் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட "கொமெட்சுப்பர்" லொறியின் அடிச் சட்டத்திற்கு உடற்கோப்பு அமைப்பதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

இவ் ஒப்பந்தத்தைச் செய்யவிரும்புபவர்கள் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்புகொண்டு நிபந்தனைகளைப் பெற்று கூறுவிலையை 18.06.2005 சனி காலை 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக 'பொதுமுகாமையாளர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம், மருதங்கேணி, தாளையடி' என்ற முகவரிக்கு தபாலிலோ, நேரிலோ அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

**பொதுமுகாமையாளர்,**
வடமராட்சி கிழக்கு
ப.நோ.கூ.சங்கம்.

மருதங்கேணி,
தாளையடி.

(36512)(42-13-34)

## பதவி வெற்றிடம்

### கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி

1. பதவி:[அ] வெளிக்கள உத்தியோகத்தர்
   [ஆ] விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர்
2. தகைமைகள்: க.பொ.த.(சா/த) கணிதம், தமிழ் உட்பட ஆறு பாடம் சித்தி.
3. அனுபவம்: விற்பனை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிப்பவர் குறைந்தது ஒரு வருடகால காப்புறுதி அனுபவம் உடையவர்களாக இருத்தல்வேண்டும்.
4. வெளிக்கள உத்தியோகத்தர் பதவிக்கு காப்புறுதித் துறையுடன் சம்பந்தப்படாத நிறுவனங்களில்வேலை செய்பவர்கள் பகுதிநேர வேலையாக செய்ய விண்ணப்பிக்கலாம்.
5. விண்ணப்பங்கள் பின்வரும் சான்றிதழ்களுடன் 20.06.2005 இற்குப் பிந்தாமல் "**மேற்பார்வையாளர், கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி, 305, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**" என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
   - அ. கிராம சேவையாளர் சான்றிதழ்.
   - ஆ. அண்மையில் பெற்ற இரண்டு சான்றிதழ்கள்.
   - இ. மேலதிக தகைமைச் சான்றிதழ்.
   - ஈ. அனுபவச் சான்றிதழ்.
   - உ. கல்விச் சான்றிதழ்.
6. நேர்முகப் பரீட்சை 24.06.2005 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்பப்படமாட்டா. விண்ணப்பிப்பவர்கள் மூலச்சான்றிதழுடன் சமுகமளிக்கவேண்டும்.

**மேற்பார்வையாளர்,**
**கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி,**
**யாழ். கிளை.**

305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(ஃ/43378)(42-13-34)

# பொதிசெய்த உணவுகளை வாங்கும்போது காலாவதித் திகதியை அவதானியுங்கள்!

## பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன்14

பொதிசெய்யப்பட்ட உணவுப்பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது அவற்றின் விற்பனைக்கான காலாவதித் திகதியைப் பார்வையிடவேண்டியது பாவனையாளரின் மிக முக்கிய கடமையாகும்.

- இவ்வாறு அறிவுறுத்தியுள்ளார் மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

இது விடயமாக அவர் பொதுமக்களுக்கு விடுத்துள்ள பொதுஅறிவிப்பு வருமாறு:-

அண்மையில் எமது சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களால் உணவகங்களிலும் வர்த்தக நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனைகளின்போது விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. பின்னர் அப் பொருள்கள் யாவும் கைப்பற்றப்பட்டு அந்த வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருள்கள் உடல் நலத்திற்கு தீங்கு விளையலாம். எனவே, பொதுமக்கள் பொதி செய்யப்பட்ட உணவுப்பொருள்களை வாங்கும்போது, விற்பனை காலாவதித் திகதியை அவதானமாக பார்த்து வாங்கவேண்டும்.

விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் உணவகங்கள், வர்த்தக நிலையங்கள் பற்றிய தகவல்களை உடனடியாக உங்கள் பகுதி சுகாதார வைத்திய அதிகாரிக்கு அல்லது பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அறியத்தரவும். சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராக சுகாதாரத் திணைக்களத்தினால் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, விற்பனைத் திகதி காலாவதியான உணவுப் பொருள்களின் விற்பனையை கட்டுப்படுத்த பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம். - என்று அதில் உள்ளது. (எ)

**குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்**

### வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

குடத்தனை,ஜூன்14

வளர்ப்பு நாய்களுக்கு நோய்த்தடுப்பூசி ஏற்றல், உரிமம் வழங்கல் ஆகிய நடவடிக்கைகளை பருத்தித்துறை நகர சபை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதல் கட்டமாக இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் பருத்தித்துறை நகரசபை அலுவலகத்திலும், மாலை 2 மணி தொடக்கம் 4 மணி வரை தும்பளை செண். அன்ரனிஸ் சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (எ-78)

### தரையில் இருந்து கற்கும் மாணவர்கள்

வலிமேற்கு,ஜூன்14

அராலி தெற்கு அ.மி.த.க.பாடசாலை மாணவர்கள் தளபாட வசதியின்மையால் தரையில் இருந்து கற்றல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கிடையில் மேற்படி பாடசாலை மாணவர்களின் நெருக்கடி நிலையை உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள் உரியநடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ-175)

### பண்டத்தரிப்பில் 'பாசுமதி' இனம் அறிமுகம்

கோண்டாவில்,ஜூன்14

பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனம் 'பாசுமதி' என்ற புதிய இன விதைநெல்லை அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்தப் புதிய இன விதை நெல்லைப் பெற விரும்பும் விவசாயிகள் பண்டத்தரிப்பு விவசாய சம்மேளனத்திடம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம் என சம்மேளனத் தலைவர் அறிவித்துள்ளார். (எ-49)

### நாவற்குழிப் பாலத்தின் புனரமைப்பு வேலைகள் துரித கதியில்

சாவகச்சேரி,ஜூன்14

நாவற்குழிப் பாலத்தின் புனரமைப்புப் பணிகள் துரித கதியில் இடம்பெற்றுவருகின்றன.

பாலத்தின் புனரமைப்புப் பணியில் ஈடுபட்டுவரும் ஊழியர்கள் இரவுபகலாக கடமையில் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

இதற்கிடையில், பாலத்தின் புனரமைப்புப் பணிகளுக்குத் தேவையான இரும்புக் கேடர்கள், இரும்புச் சட்டங்கள், தகடுகள் மற்றும் உபகரணங்கள் கனரக வாகனங்களில் எடுத்து வரபட்டு அவற்றைத் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-31)

### பளையில் 3 வீதிகள் தார் வீதிகளாக மாற்றம்

தென்மராட்சி,ஜூன்14

பளைப் பிரதேசத்தில் உள்ள மூன்று வீதிகள் தார் வீதிகளாக மாற்றியமைக்கப்படவுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாண அரசின் 'மகா நெகும' கிராமிய வீதிகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்த வீதிகள புனரமைக்கப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

மாசார் உள்முக வீதி, அரசர் கேணி செந்தில் நகர் வீதி, தம்பகாமம் வீதி ஆகியவையே இத்திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவுள்ளன. (எ-117)

### மண்டைதீவு ம.விக்கு கணனித் தொகுதி

மண்டைதீவு,ஜூன்14

மண்டைதீவு மகா வித்தியாலயத்துக்கு வித்தியாலய பழைய மாணவர் ஒருவர் இரண்டு கணனிகள் அடங்கிய கணனித்தொகுதி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார் எனப் பாடசாலை அதிபர் சு.கனகரத்தினம் தெரிவித்தார்.

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவரும் தற்போது, வெளிநாடு ஒன்றில் வசித்துவருபவருமான பழைய மாணவர் ஒருவரே ஒரு லட்சம் பெறுமதியான கணனித் தொகுதியை வழங்கியதாகவும் அதிபர் தெரிவித்தார். (எ-88)

# நோராட் நிறுவன உதவியுடன் படகு கட்டும் தொழிற்சாலை

## சாத்தியம் உண்டென்கிறார் யாழ்.வந்த ஆலோசகர்

கரவெட்டி,ஜூன்14

யாழ்.மாவட்டத்தில் படகுகட்டும் நிரந்தர தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என கூட்டு அபிவிருத்திக்கான நோர்வே நிறுவனத்தின் (நோராட்) சிரேஷ்ட ஆலோசகர் கிர்ஸ்டன் யெஜுரு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடந்த 9ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தந்த நோராட் சிரேஷ்ட ஆலோசகர் கிர்ஸ்டன் யெஜுரு, ஏ.ஜே. கடற்றொழில் நிறுவன நிர்வாக இயக்குநர் திருமதி அர்னங் சன்ட்விக், உதவியாளர் திருமதி எஸ்.வித்தியா பெரேரா, சுனாமி புனர்வாழ்வுத் திட்ட இணைப்பாளர் கே.தர்மசீலனர் ஆகியோர் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட தும்பளை, இன்பருட்டி, பொலிகண்டி, தெணியடி, குடத்தனை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள படகு திருத்தும் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து நோராட் பிரதிநிதிகளுக்கும் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

அதில் கலந்துகொண்ட நோர்வே நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகர் கிர்ஸ்டன் யெஜுரு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடபகுதியில் நோராட்டின் உதவியுடன் உருவாக்கப்பட்ட படகு திருத்தும் தொழிற்சாலைகளில் செயற்பாடுகள், வெற்றியளித்துள்ளதை நாம் நேரில் பார்த்து பெருமிதம் அடைகின்றோம். இந்த வெற்றிக்கு எமது பணமல்ல காரணம் உங்களுடைய கட்டமைப்பும் செயற்பாடும் தான் அடிப்படைக் காரணம்.

எனவே, உங்களது கஷ்டங்கள் தீர்வதற்கும் கடற்றொழில்கள் திறம்பட செயற்படுவதற்கும் நிரந்தர படகுகட்டும் தொழிற்சாலை தேவை என எமக்குத் தெரிகின்றது. இதை நாம் எமது அதிகாரிகளுக்குத் தெரிவிப்போம். அவர்களின் உரிய நடவடிக்கையில்தான் இதற்கான சாத்தியம் உண்டு.

அதற்கான நடவடிக்கைகளில் நாங்களும் நீங்களும் விரைந்து செயற்பட்டால் யாழ். மாவட்டத்திலும் படகுகட்டும் நிரந்தர தொழிற்சாலை ஏற்படும் என்றார்.

மேற்படி நிகழ்வின் இறுதியில் கோரப்பட்ட பிரதிநிதிகளுக்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க உப செயலாளர் என்.எஸ். நேசரத்தினம் நன்றி தெரிவித்தார். (எ-70)



நோர்வே நாட்டு நிறுவனம் ஒன்றின் அனுசரணையுடன் ஏ.ஜே. இன்டஸ்றீஸ் நிறுவனத்தினால் மாதகல் பகுதியில் வைத்துப் புனரமைக்கப்பட்ட படகுகள் அண்மையில் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. திருத்தப்பட்ட படகு ஒன்றை கடற் புலிகளின் வலிகாமம் அரசியல்துறைப் பொறுப்பாளர் மணாளன், வலி. தென்மேற்குப் பிரிவு கடற்றொழில் பரிசோதகர் எஸ். ஜெயசீலன் ஆகியோர் படகு உரிமையாளரிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம் இது. *(படம்:- வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

காரைநகர்,ஜூன்14

காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையினால் நடத்தப்பட்ட கலை இலக்கியப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்டவர்களின் பெயர் விவரம் முறையே வருமாறு:-

**கட்டுரை**

**(சிரேஷ்ட பிரிவு)**

அ.சிவகலா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), பேராஜினி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), அ.காயத்திரி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

**(கனிஷ்டபிரிவு)**

இ.இராஜேஸ்வரி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), ப.பவிதா (யாழ்ற்றன் கல்லூரி), தி.நந்தகோபால் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

**கவிதை**

**(திறந்த போட்டி)**

இ.பகிப்பிரியா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), தி.நந்தகோபால் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), சோ.தஜந்தினி (யாழ்ற்றன் கல்லூரி).

**சிறுகதை**

**(திறந்த போட்டி)**

அ.சிவகலா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), அ.காயத்திரி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), பே.ராகினி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

**சித்திரப் போட்டி**

**(கனிஷ்ட பிரிவு)**

ந.புஸ்பமேனா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), எஸ்.பிரவீனன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), க.பாலகுமார் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

**சிரேஷ்ட பிரிவு**

செ.ஐங்கரன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), சு.கோபாலன் கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), கி.தேவதாசன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

**திறந்த போட்டி**

சோ.கோகிலன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), இ.திருக்குமரன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), ரே.நிலவன் (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

**நாட்டுப்புறப் பாடல்**

**(கனிஷ்டபிரிவு)**

கு.சுஜாத்தா (வியாவில் சைவ வித்தி.), ச.கிருஷ்ணவேணி (யாழ்ற்றன் கல்லூரி), க.விஜி (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

**சிரேஷ்ட பிரிவு**

சா.சரிதா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), சி.பத்மலோஜினி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), கோ.சுகந்தினி (யாழ்ற்றன் கல்லூரி).

**திறந்த போட்டி**

ஐ.சிவகலா (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தி.), க.யோகராணி (வியாவில் சைவ வித்தி. - இருவரும் முதலாமிடம்). (எ-73-204)

# வலி.மேற்கில் பாதீனியத்தை அழிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை

வலி.மேற்கு,ஜூன்14

வலி.மேற்கில் தனியார் காணிகளில் காணப்படும் பாதீனியம் களைகளை அழிப்பதற்கு கிராம அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

- இவ்வாறு பணிப்புரை விடுத்துள்ளார் வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலர் சி.ஏ. மோகன்றாஸ்.

சங்கானை, வட்டுக்கோட்டை போன்ற இடங்களில் தனியார் காணிகளில் பாதீனியம் களைகள் அதிகளவில் வளர்ந்துள்ளன.

இத்தகைய பாதீனியம் களையை காணிகளின் உரிமையாளர்களுடன் தொடர்புகொண்டு அழிப்பதற்குக் கிராம அலுவலர்கள் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும். இது விடயத்தில் காணிகளின் உரிமையாளர்களுக்கும் முக்கிய பங்குண்டு என்று பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (எ-175)

# உரும்பிராய், கோப்பாய் பகுதிகளில் பாதீனியத்தின் பெருக்கம் அதிகரிப்பு

கோண்டாவில்,ஜூன்14


யாழ்.மாவட்டத்தில் உரும்பிராய், கோப்பாய், உடுவில் ஆகிய பகுதிகளில் பாதீனியத்தின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகிறது.

இந்த நச்சுச் செடிகளால் எதிர்காலத்தில் விவசாயத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் பெரும் அச்சுறுத்தல் ஏற்படும் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தில் உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக பிரதேச விவசாயக் குழுக் கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்படுகின்ற போதிலும் எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதில்லை என விவசாயி ஒருவர் கவலை தெரிவித்தார். (எ-49)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தவப்பேறு
20.06.1924

சிவப்பேறு
15.05.2005

திதி:
ஸப்தமி



## அமரர் அம்பலம் கந்தையா சுந்தரம் (A.K.S.)

(உரிமையாளர் - A.K.S. கமம் 5ஆம் வாய்க்கால், பரந்தன், A.K.S. அரிசி ஆலை,
A.K.S. ரான்ஸ்போட், A.K.S. மோட்டோர்ஸ்.

பாசமும் நேசமும் கொண்டு பண்புடனே வாழ்ந்து
சொந்த பந்தங்களின் சுகமதை நினைந்து
வாசமலராய் தியாகதீபமாய் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
நாம் நல்வாழ்வு வாழ வழிகாட்டியாய் இருந்து

பேசும் தெய்வமாய் எமக்காகவே தன்னை அர்ப்பணித்து
பெருவாழ்வு வாழ்ந்த பெருந்தகையே எங்குற்றீர்!
காசும் பணமும் பெரிதென எண்ணாமல் மனிதரை மதித்த
மனித தெய்வமே! அடைக சாந்தி!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

15.05.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் அம்பலம் கந்தையா சுந்தரம் (A.K.S.) அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு அன்னாரின் இல்லத்தில் இன்று (14.06.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும். அத்தருணம் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு எமக்கு அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலமாகவும் கண்ணீர் அஞ்சலி இரங்கலுரை நிகழ்த்தியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எமது துயரில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"லட்சுமி பவனம்"
கட்டுக்காளி வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(C/43352) (54-11-19)

# மாணவர்களின் அனுபவ அறிவு விருத்தியில் உயர்தர வகுப்புச் செயற்றிட்டங்களின் பங்களிப்பு

வாழ்க்கை என்ற பாதையிலே ஒவ்வொரு மனிதனும் பெறுகின்ற புதிய அனுபவங்கள் புதிய புதிய பாடங்களை மனிதர்களுக்குச் கற்றுக்கொடுக்கின்றன.

கல்லையும் முள்ளையும் கடந்து வரும் மனிதனால் தான் தனது வாழ்க்கைப் பயணத்தில் வரும் எத்தகைய இடர்களையும் சமாளித்து முன்னேற முடியும். செங்கம்பளங்களையும் பஞ்சுமெத்தையையும் மட்டும் வாழ்க்கையில் சந்தித்துப் பழக்கப்பட்ட மனிதர்கள் சிறிய துன்பம் ஏற்படும் போது கூட அதனைச் சமாளிக்க முடியாது துவண்டு விடுகின்றனர்.

அதாவது, அனுபவங்கள் மூலம் பெறப்படுகின்ற கல்விதான் வாழ்க்கையில் ஏற்படும் அறைகூவல்களைச் சமாளித்து முன்னேறுவதற்கு பெரிதும் உதவுகின்றன.

இதனால்தான் ஜி.சீ.ஈ உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு தனியாள் செயற்றிட்டம், குழுச்செயற்றிட்டம் ஆகிய இரண்டு வகையான செயற்றிட்டங்கள் ஏறக்குறைய 5 வருடங்களாக பாடசாலைகளில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

அதாவது, பாடசாலைக் கல்வியில் எல்லையில் நிற்கின்ற உயர்தர வகுப்பு மாணவர்கள் தாம் சார்ந்த சமூகப் பிரச்சினைகளை இனம் காணவும் அதனை விஞ்ஞானரீதியில் அணுகி ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவிற்கு வரவும், சமூகத்தின் பல்வேறுபட்ட மனிதர்களுடன் தொடர்பு கொண்டு சமூகத்தை இனம் காணவும் தேவையான அனுபவ அறிவினை மாணவர்கள் பெறுவதற்கு சந்தர்ப்பங்களை வழங்குவதற்காகவே பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

உண்மையில் நடப்பது என்ன?

**கல்விக்களம்**

செயற்றிட்டங்கள் மூலம் மாணவர்கள் அனுபவ அறிவினைப் பெறுவதற்குரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுப்பது மிகவும் குறைவு - ஏனோதானோ என்ற நிலையிலேயே செயற்றிட்டங்களுக்குரிய ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் வழங்கப்படுகின்றன.

பிரதி பண்ணும் இயந்திரங்களுக்குரிய அனுபவ அறிவினை மட்டுமே பெரும்பாலான உயர்தர வகுப்பு மாணவர்கள் செயற்றிட்டங்கள் மூலம் இன்று பாடசாலைகளில் பெற்றுக் கொள்கின்றனர்.

காரணம் என்ன?

பெரும்பாலான பாடசாலைக் கல்விச் சமூகம் உயர்தர வகுப்புச் செயற்றிட்டங்களுக்கு கூடிய முக்கியத்துவம் கொடுப்பதில்லை. "பாதை தவறிய கால்கள் விரும்பிய ஊர் சென்று சேர்வதில்லை" என்பது போல.

செயற்றிட்டம் என்றால் என்ன?

செயற்றிட்டம் குறித்து நிற்கும் இலக்குகள் எவை?

செயற்றிட்டத்தை எவ்வாறு அமுல் படுத்தி நிறைவேற்றலாம்?

போன்ற விவரங்களின் அடிப்படை அறிவு இருந்தால் மட்டுமே செயற்றிட்டத்தின் இலக்குகளை மாணவர்கள் வெற்றிகரமாக அடைய முடியும். கல்விச் சமூகம் மாணவர்களுக்கு சிறப்பான ஆலோசனைகளை வழங்கி வழிப்படுத்த முடியும்.

இல்லாவிட்டால் "ஏட்டுச்சுரைக் காய் கறிக்கு உதவாது" என்ற நிலை உய்தர வகுப்பு மாணவர்களுக்கான செயற்றிட்டங்களுக்கு ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாமற் போய்விடும்.

### செயற்றிட்டம்

செயற்றிட்டம் என்பது குறிப்பிட்ட ஒன்று அல்லது பல குறிக்கோள்களை அடைவதற்கு மாணவர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ப ஒரு தலைப்பைத் தெரிவு செய்து நன்கு திட்டமிட்டு குறிப்பிட்ட காலவரையறைக்குள் நடைமுறைப்படுத்துவதன் மூலம் கற்றலையும் தேர்ச்சிகளையும் விருத்திசெய்வதற்கு உதவுகின்ற செயன்முறை ஆகும்.

உயர்தர வகுப்பு மாணவர்கள் தனியாள் செயற்றிட்டம் குழுச்செயற்றிட்டம் என இரண்டு வகையான செயற்றிட்டங்களை நிறைவேற்றுவது அத்தியாவசியமானது ஆகும்.

### செயற்றிட்ட வகைகள்

மாணவர்கள் தமது தனித்துவமான ஆற்றல்களை முழுமையாகப பயன்படுத்தி செயற்றிட்டத்தை வெற்றிகரமான முறையில் மகிழ்ச்சியாக நிறைவேற்றுவதற்கு சுதந்திரமான முறையில் பொருத்தமான தலைப்பைத் தெரிவுசெய்தல்வேண்டும் இதற்கு செயற்றிட்டத்தின் அடிப்படையான நான்கு வகைகளை அறிந்திருப்பது அவசியம் ஆகும்.

**1. பிரச்சினை வகைச் செயற்றிட்டம்.**

மாணவர்கள் தாம் சார்ந்த சமூகத்தில் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்துகின்ற பிரச்சினைகளில் ஏதாவது ஒன்று இனம்கண்டு விஞ்ஞானரீதியில் அதனை அணுகி, ஆராய்ந்து திருத்தமான தரவுகளைப் பெற்று, தரவுகளைப் பகுப்பாய்வு செய்து திருத்தமான முடிவைப் பெறுவதற்கு உதவுகின்ற செயற்றிட்டம் ஆகும்.

இங்கு மாணவர்கள் தமது சமூகம், சூழல் சார்ந்த பிரச்சினைகளை தலைப்பாகத் தெரிவுசெய்யும்போது, சமூகத்துக்கும் இந்த வகையான செயற்றிட்டங்கள் புதிய தகவல்களையும் நியாயமான தீர்வுகளை அடைவதற்குரிய பாதைகளையும் கூறமுடியும்.

இதனால், சமூகமும் நன்மை அடையும் உதாரணங்களாக பின்வரும் தலைப்புகளைக் குறிப்பிடலாம்.

"குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்து மரணங்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்"

"ஈழத்தமிழ், சமூக முன்னேற்ற வளர்ச்சியில் தொலைக்காட்சி நாடகங்கள் ஏற்படுத்தும் பாதிப்புகள்"

"வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிப்பதில் பாடசாலை மாணவர்கள் முன்மாதிரியாகச் செயற்படும் போது ஏற்படும் நன்மைகள்"

"தன்னிச்சையான ஆங்கில மருந்துப் பாவனையால் ஏற்படும் ஆபத்து, விளைவுகளும் அதனைக் குறைபபதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளும்"

### ஆய்வு வகைச் செயற்றிட்டம்

இது சமூகத்தின் முக்கியமான ஏதாவது ஓர் இயல்பை தெரிவு செய்து தரவுகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்யும் செயற்றிட்டமாகும்.

இச் செயற்றிட்டத்தின் மூலம் சில சமயம் ஈற்றில் குறிக்கோளை அடைய முடியாத நிலை ஏற்படினும் புத்தறிவைப் பெற்றுக்கொள்ளலாம். புதிய வழிமுறைகள் மீது கவனம் ஈர்க்கப்படும்.

புதிய செயற்பாடுகளினால் மனத் திருப்தியும்கூடுதலாக ஏற்படும்.

உதாரணங்களாக பின்வரும் தலைப்புகளைக் குறிப்பிடலாம்.

"ஈழத்தமிழ் கிராம மக்களிடையே பாரம்பரியமாகக் கைக்கொள்ளப் பட்டு வந்த மூலிகை மருந்துப் பாவனைகள்"

"பாரம்பரிய உணவுப் பழக்க வழககங்களை புத்துயிர்ப்பு அடையச் செய்வதன் மூலம் போசணைக் குறைபாட்டு நோய்களைக் குறைத்தல்"

"குறிப்பிட்ட சமூகம், கல்வி தொடர்பான நிறுவனங்களின் வரலாறு பற்றிய ஆய்வு"

"மாணவர்கள் மத்தியில் அருகி வரும் வாசிப்புப்பழக்கத்தை அதிகரிப்பதற்கு கல்விச் சமூகம் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள்"

### ஆக்கவகைச் செயற்றிட்டங்கள்

இவ்வாறான செயற்றிட்டங்களில் ஈடுபடும் மாணவர்கள் ஈற்றில் யாதேனும் ஓர் ஆக்கத்தை உருவாக்குவர். இந்த ஆக்கம் கவிதைத் தொகுப்பாகவோ, கட்டுரையாகவோ, நாடகமாகவோ அல்லது அலங்காரப் பொருளாகவோ, உபகரணமாதிரியுருவாகவோ வேலைகளை எளிமைப் படுத்தும் பொறியாகவோ அமையலாம். இவை சுய புத்தாக்கங்களாகவோ திரிபுகளாகவோ புதிய திட்டங்களாகவோ அமையலாம்.

**சுப்பிரமணியம் சிவநேசராசன்**
**ஆசிரியர்,**
**கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

ஆக்கவகைச் செயற்றிட்டங்களுக்கு உதாரணங்களாக பின்வரும் தலைப்புகளைக் குறிப்பிடலாம்.

"வீதி விபத்துகள் பற்றி சமூகத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தக் கூடிய தெருக் கூத்துகள் அல்லது தாளலய நாடகங்கள்"

"வீதி ஒழுங்குகளைக் கடைப் பிடிப்பதில் பாடசாலை மாணவர்களின் பங்களிப்புத் தொடர்பான வில்லிசை"

"வடித்தல் மூலம் குடிதண்ணீரைச் சுத்திகரிக்கும் எளிய உபகரண ஆக்கம்"

"வேப்பம்பூ வடகம் தயாரித்தல்"

"சவர்க்காரம் தயாரித்தல்"

"எலுமிச்சம் பழ ஊறுகாய் தயாரித்தல்"

### பொருளாதார ரீதியில் பயனுறுதியுடைய செயற்பாடுகளில் ஈடுபடும் வகைச் செயற்றிட்டங்கள்

இந்த வகைச் செயற்றிட்டத்தில் ஈடுபடும் மாணவர்கள் எதிர்காலத்தில் தாம் சுயவேலைவாய்ப்பில் ஈடுபடுகின்ற திறமையைக் கொண்டிருப்பதுடன் மற்றவர்களுக்கும் வழிகாட்ட முடியும்.

உதாரணங்களாக பின்வரும் தலைப்புகளைக் குறிப்பிடலாம்.

"மூலிகைத் தோட்டம் அமைத்தல்"

"கூட்டெரு தயாரித்தல்"

"தேனீ வளர்த்தல்"

"கழிவுக் கடதாசிகளைப் பயன்படுத்தி விளையாட்டுப் பொம்மைகள் ஆக்கல்"

"தக்காளிப்பழ ஜாம் தயாரித்தல்"

### செயற்றிட்டக் குறிக்கோள்கள்

1.எதிர்கால வாழ்வில் ஏற்படும் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொண்டு தீர்வு காண்பதற்கு தூண்டப்படல்.

2. குழுவாக இணைந்து கருமம் ஆற்றும்போது சமூகத்திறன்கள் வளர்க்கப்படல்.

3. வீடு, பாடசாலை, சமூகம் தொடர்பான உண்மைநிலையை இனம்காணக்கூடிய அறிவு வள்ர்க்கப்படல்.

4. சமூகத் தொடர்புகளைக் கட்டியெழுப்பல்.

5. தன்னம்பிக்கையை வளர்த்தல்.

6. சமூகப் பிரச்சினைகளை இனம் காணல்.

7. தொழில் மகத்துவத்தை உணர்ந்து வேலை உலகை இனம் காணல்.

8. தொடர்பாடற் திறன்கள் வளர்க்கப்படுதல்.

9. திட்டமிட்டு வேலை செய்தல்.

10. நேரத்தை முகாமைத்துவம் செய்தல்.

### செயற்றிட்டப் பிரேரணை

குறிப்பிட்ட சில பதவிகளை ஏற்கும்போது சத்தியப் பிரமாணம் செய்வது போல ஒரு செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பு செயற்றிட்டப் பிரேரணை அல்லது செயற்றிட்ட முன்மொழிவு மாணவனால் தயாரிக்கப்பட்டு பாடசாலைச் செயற்றிட்டக் குழுவிடம் வழங்குவது கட்டாயமானது ஆகும்.

இதில் செயற்றிட்டத் தலைப்பு, அறிமுகம், குறிகோள்கள், செயற்படுத்தும்முறை, காலச் சட்டகம், பொறுப்பாசிரியர் விதப்புரை, செயற்றிட்டக் குழுவின் அனுமதி போன்ற விவரங்கள் அடங்கியிருக்கும்.

### செயற்றிட்ட அறிக்கை தயாரித்தல்

ஒரு மாணவனால் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்ட முடிவில் அதன் குறிக்கோள்கள், பெறுபேறுகள் என்பன உள்ளடக்கப்படக்கூடியதாக ஆக்கப்பட்ட சுருக்க ஆவணம் செயற்றிட்ட அறிக்கை எனப்படும். இது மதிபபீட்டுக்காக செயற்றிட்டக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இதில் பின்வரும் விவரங்கள் அடங்கியிருக்கும்

1. தலைப்புப் பக்கம்.
2. உள்ளடக்கம்.
3. நன்றியுரை.
4. செயற்றிட்ட அறிமுகம்.
5. குறிக்கோள்கள்.
6. நன்மை அடைவோர் விவரம்.
7. செயற்றிட்டத்துக்குப் பயன் படுத்தப்பட்ட மனித, பௌதிக வளங்கள்.
8. வளங்கள் பயன்படுத்தப்பட்ட முறை.
9. செயற்றிட்டம் அமுலாக்கப் பட்ட முறை.
10. காலச் சட்டகம்.
11.தரவுகளைச் சமர்ப்பித்தல், பகுப்பாயவு செய்தல்.
12. முடிவெடுத்தல், விதப்புரைகள், கண்டுபிடிப்புகள், பெறுபேறுகள்.
13. சுயமதிப்பீடுகள்.
14. உசாத்துணை நூல்கள்.
15. பின்னிணைப்புகள்.

ஆகவே, உய்தர வகுப்புச் செயற்றிட்டங்கள் மூலம் மாணவர்கள் பிரதி பண்ணும் இயந்திரங்களாக மட்டும் மாற்றப்படாது முழுமையான அனுபவ அறிவினைப் பெறுவதற்கு தேவையான ஆலோசனை வழங்கி, வழிப்படுத்த வேண்டியது யாழ்கல்விச் சமூகத்தின் தலையாய கடமை ஆகும்.

# கல்விச்சாலைக் காட்சிகள்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட கலைத்திறன் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் கலாசாலை அதிபர் தி.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மற்றும் விரிவுரையாளர்கள் மற்றும் ஆசிரிய மாணவர்களால் விழா மண்டபத்திற்கு அழைதது வரப்படுவதையும் மன்றத்தினால் வெளியிடப்பட்ட கிராமியப் பாடல்கள் என்னும் நூலைப் பிரதமவிருந்தினரிடமிருந்து சிரேஷ்ட விரிவுரையாளர் இ.மருதலிங்கம் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம். (எ-203)



புனித சம்பத்திரிசியார் கல்லூரியின் தவத்திரு தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கலாபூஷணம் ஜி.பேபினஸ், மாணவன் ஒருவனுக்கு சான்றிதழ் வழங்குதைப் படத்தில் காணலாம். (த-190)



வரணி, இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய இல்லமெய் வன்மைப் போட்டியில் விருந்தினர்களாகக் கலந்துகொண்ட நாடாளு மன்ற உறுப்பினர் கி.சிவனேசன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.றெஜினா இருதயநாதன், யாழ்.பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் எஸ்.கதிர்காமநாதன் ஆகியோர் மைதானத்துக்கு அழைத்துச் செல்லப்படுவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:தென்மாரட்சிச் செய்தியாளர்)*



அண்மையில் நடைபெற்ற யாழ்.மாவட்ட மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டியில் "சிந்துநடைக் கூத்துப்" போட்டியில் முதலிடம் பெற்ற சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடகக் குழுவினர் அரங்கில் காப்புப் படிக்கும் போது எடுக்கப்பட்ட படம். (எ-13)

ஓம் ஸ்ரீராம ஜெயம்

# யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானத்தில் சனிப்பெயர்ச்சியை முன்னிட்டு விசேட நவக்கிரக ஹோம ஆராதனை வழிபாடு

**24.06.2005**

*ஸ்ரீமந் நாராயணன் அடியார்களே!*

நிகழும் மங்களகரமான பார்த்திப ஆண்டு ஆனித் திங்கள் 10ஆம் நாள் (24.06.2005) வெள்ளிக்கிழமை சனீஸ்வரன் மிதுனராசியிலிருந்து கடகராசிக்கு மாறுகிறார். இதனை முன்னிட்டு அன்று காலை 7.30 மணிமுதல் நவக்கிரக தேவர்களுக்கு விசேட ஹோமம், அபிஷேக ஆராதனை, சனீஸ்வர பகவானுக்கு விசேட சகஸ்ரநாம (1008) அர்ச்சனை என்பன நிகழும்.

இந்த ஹோமத்தில் பங்குபற்ற விரும்பும் அடியார்கள் தேவஸ்தான அலுவலகத்தில் 22.06.2005இற்கு முன்னதாக பெயர், நட்சத்திர விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளலாம்.

★ அடியார்கள் பூக்கள், பால், இளநீர், அபிஷேக ஹோம திரவியங்களை கொடுத்துதவலாம். அத்துடன், இந்த வழிபாட்டில் பங்கேற்று கிரஹதோஷம் நீங்கப்பெற்று ஸ்ரீமந் நாராயணனின் திருவருள் கடாட்சத்துக்குப் பாத்திரமாகி உய்திபெற்று நல்வாழ்வு வாழ வழிகோலுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## ராசி - நட்சத்திர விவரம்

மேடம்- அச்சுவினி, பரணி, கார்த்திகை நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு 4ஆம் இடம் (அர்த்தாஷ்டமம்)

மிதுனம்- மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதம், திருவாதிரை, புநர்பூசம் முதலாம், 2ஆம், 3ஆம் பாதங்கள் நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு ஏழரை ஆண்டுச் சனி கடைக்கூறு.

கடகம்- புநர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு ஏழரை ஆண்டுச் சனி நடுக்கூறு.

சிம்மம்- மகம், பூரம், உத்தரம் முதலாம் பாதம் நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு ஏழரை ஆண்டுச் சனி ஆரம்பம்.

தனு- மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம நட்சத்திரங்களில் பிறந்தோருக்கு அட்டமத்துச் சனி.

பெருமாள் கோயில், யாழ்ப்பாணம். - ஆதீன மகாசபை.

☎ 021 222 2476 (ச-43376) (39-18-19-26)

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 23 ● 08 ● 1918



விண்ணில் 01 ● 06 ● 1998

## அமரர் சுப்பிரமணியம் சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற முதலியார்)

திதி: பூர்வபக்க ஸப்தமி (14-06-2005)

ஈரேழுலகிலும் நாம் நேர்மையாளராக
எந்நாளும் வாழ வழிகாட்டிய தந்தையே!
ஏழாண்டுகள் எம்மைப் பிரிந்தாலும் பிரியாது
வானுலகில் நின்று வழிநடத்திப் பெறுக நின் ஆத்மசாந்தி.

8ஆம் கட்டை, மல்லாகம். (36504)(26-18-19)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# இரண்டாம் ஆண்டு நினைவு தினம்



## செல்வரத்தினம் சசிகரன் லெப்.கேணல் கதிர்

மலர்வு 22.09.1978

உதிர்வு 14.06.2003

விடுதலை பெற்று இந்நாடு வளம்பல காணும் வேளை
தாயகத் தலைவன் வழியில் விடுதலை வேங்கையாய் உதித்தாய்
வேங்கையாய் வீரனாய் சரித்திரம் பல படைத்தாய்
சத்தமின்றி காலனவன் உன் உயிரில் புகுந்தான்
கடற்புலியாய் களம் பல கண்ட கதிர் - உன்னுடன்
சங்கமமான பதினொரு மாவீரர்களையும்
இரண்டாம் ஆண்டு நிறைவு நாளில்
நினைவு கூறி அஞ்சலிக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

மீசாலை கிழக்கு, மீசாலை.

அப்பா, அம்மா, அக்காமார், அண்ணா, தம்பிமார்.

(36492) (56-17-45)

# ஒருங்கிணைப்பு குழுக்கூட்டங்கள்

வலி.தெற்கு,ஜுன்14

வலி.தெற்குப் பிரதேச செயலக திணைகளத் தலைவர்களுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தைத் தொடர்ந்து விவசாயிகள் குழுக்கூட்டமும் இடம்பெறும். (ஒ-152)

✪ ✪ ✪

காரைநகர்,ஜுன்14

காரைநகர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு சம்பந்தப்பட்ட திணைக்களங்கள்,அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-73)

# பன்றிகளால் பயிர்கள் நாசம்

வலி.தெற்கு,ஜுன்14

வலி.வடக்குப் பிரதேச பிரிவில் உள்ள கிராமங்களில் விவசாயிகளால் செய்கை பணணப்பட்டுள்ள தோட்டங்களில் வளர்ந்துள்ள பயிர்களை இரவு நேரங்களில் பன்றிகள் சேதப்படுத்தி அழிப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஏழாலை, குப்பிளான், கட்டுவன், சித்தியம்புளியடி போன்ற கிராமங்களிலேயே இவ்வாறு பன்றிகளால் சிரமம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இரவுவேளைகளில் உயர்பாதுகாப்பு வலயப் பக்கமாக இருந்து கூட்டமாகவரும் பன்றிகளே இந்த நாசகார வேலைகளில் ஈடுபடுவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கிராமங்களில் மரவள்ளி, பாகல், பயிற்றை, மிளகாய், வெங்காயம் போன்ற மரக்கறிகள் ஏராளமான தோட்ட நிலங்களில் செய்கை பண்ணப்பட்டிருந்தபோதிலும் பன்றிகளின் நாச வேலைகளால் தாம் பெரிதும் பாதிப்படைந்து நஷ்டம் அடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பன்றிகளின் தாக்கத்தில் இருந்து பயிர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் விவசாயிகள் ஒன்றுசேர்ந்து இரவுவேளைகளில் காவல் வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். (எ-152)

# வெடிபொருள் வெடித்து விவசாயி காயம்!

நிலத்தில் புதைந்து கிடந்த வெடிபொருள் வெடித்ததில் விவசாயி காயமடைந்தார். கடந்த வெள்ளிக்கிழமை மந்துவில் மேற்கில் இச்சம்பவம் இடம்பெற்றது.

தோட்ட வேலைக்காக மண்வெட்டியால் நிலத்தைக் கொத்திக கொண்டிருந்தவேளையில், மண்வெட்டி பட்டு வெடிபொருள் வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இதே இடத்தைச சேர்ந்த சின்னத்துரை கிருஷ்ணானந்தன் (வயது 27) என்பவரே காயமடைந்தார்.

இவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிகச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ஒ-117)


# திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும்
புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட)
குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன்
நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன்
வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467.

தொடர்பு: ரட்ணம், சோமசுந்தரம் பாலர் பாடசாலை, 22,சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(26-18-19) (43005)

# ஸ்ரீ மலையாள பகவதி ஜோதிடாலயம்





பண்டிதர் நரசிம்ம நாயுடு

PANDIT NARASEMANAIDU

(World Expert Astrologer)

இந்தியாவின் கர்நாடகாவிலிருந்து வருகைதந்துள்ளார் சர்வதேச ஜோதிடர். இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன் - மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

பிள்ளையார் இன், அறை எண் 9, 31,மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். T.P.: 077 9122836.

Pillaiyar Inn, Room No. 9, 31, Manipay Road, Jaffna, Sri Lanka.

(26-18-19) (36520)


# நான்காண்டு நினைவுகளில்...



மண்ணில் மகிழ 11~09~1984

மனம் நெகிழ 29~05~2001

## செல்வி துஸ்யந்தி இலங்கைநாயகம் (துர்க்கா)

(உயிரியல்பிரிவு மாணவி, திருகோணமலை சண்முகா - இந்துமகளிர் கல்லூரி)

திதி: வைகாசிமாத சுக்கிலபட்ச ஸப்தமி
இன்று (14-06-2005) செவ்வாய்க்கிழமை

தெல்லிநகர்ப் பதியினிலே
தெய்வமாக வந்து தித்தவளே!
துர்க்கையின் வரம்வேண்டி
'துர்க்கா' என உனை நாமழைத்தோம்
துர்க்கையின் நாளாம் செவ்வாயினிலே தோன்றி
துயரத்தைச் சுமக்கவைத்தாய் ஒரு செவ்வாயினிலே!
'குஞ்சு எழ குஞ்சு' என்று உனை நாமழைக்க
குற்றமே துமில்லாமல் எங்கேயம்மா சென்றிட்டாய்?

யாழ்.இந்து மகளிரினில் உயர்கல்வி தொடங்கி
காலனுக்கஞ்சா கடல்கடந்து திருமலை புகழ்
கல்லூரியாம் சண்முகா இந்து மகளிரில்
உயிரியல் பிரிவில் உவகையுடன் கற்றபோது
காலனவன் கொடிய பிணி வடிவில் வந்து
பறித்திட்டானோ உன் உயிரை? - ஆனாலும்
இன்றும் உன்முகம் மழலை மென்மொழி
எம்நினைவில் நிழலாக ஆடுதம்மா!



எமது அன்புச் செல்வத்தின் நான்காண்டு நினைவில்
அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் வருந்தும்:
அப்பா, அம்மா, அம்மம்மா, அண்ணாமார், அண்ணிமார்.

இராமகிருஷ்ண ம.வி. வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தொ.பே.021 222 6364. (36431) (50-11-14)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தாயோடு : 26.05.1950

தீயோடு : 16.05.2005

சேவையினைச் சொத்தாக்கி சிரிப்பைச் சிறப்பாக்கி
சேர்ந்திருந்த எம்மையெல்லாம் பிரிவால் பித்தாக்கி
ஒருவழிப்பாதையிலே ஓடி மறைந்து விட்டீர்
ஓடித்திரிந்த காலும் ஓயாமல் பேசிக்கழித்தநாவும்
ஓய்ந்துவிட்டாலென்ன ஓயாது உம்மோடு - நாம்
கூடிக்களித்த நாள்கள். கரம்குவித்து உம் பெயர்
கூவித்தொழுகின்றோம் மலர் முகத்தை மனதில் நிறுத்தி!

## அமரர் நகுலேஸ்வரி தகேந்திரன் (பிரேமா)

இல.6, சந்தானமாதா கோயில் ஒழுங்கை, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். (36508)(51-)

உன் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

## தெற்கு அரசியலில் குழப்பங்கள், மாற்றங்கள்

# அடுத்த கட்ட நகர்வுகளுக்கு தமிழர்கள் தயாராக வேண்டும்

## முல்லை. மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர்

ஒட்டுசுட்டான்,ஜூன்14

தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற அரசியல் குழப்பங்கள் - மாற்றங்களுக்கேற்ப தமிழர்கள் தங்களை அடுத்தகட்ட நகர்வுகளுக்குத் தயாராக்கிக்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் முல்லைத்தீவு மாவட்டத் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வம்.

கடந்த 11ஆம் திகதி ஒட்டுசுட்டானில் நடைபெற்ற சமகால அரசியல் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். ஒட்டுசுட்டான் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் காலை 10 மணியளவில் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இந்தக் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வே. தயா ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை முல்லை. மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அணியழகன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து துணை அரசியல் பொறுப்பாளர் உரை நிகழ்த்துகையில், ஒட்டுசுட்டான் பிரதேசத்து மக்கள் அனைவரும் எல்லைப்படையாகவும், கிராமியப்படையாகவும் மாறியதால் தான் ஒட்டுசுட்டானில் நிலைகொண்டிருந்த எதிரியைக் கலைக்கமுடிந்தது.

அதேபோல இன்று எமது பிரதேசத்திலிருந்து எமது எதிரி வெளியேறி இருந்தாலும் - இங்கே ஒரு சமாதானச்சூழல் ஏற்பட்டிருந்தாலும் - சமாதான காலத்திலே எங்களுக்குக் கிடைக்கவேண்டிய அல்லது நாங்கள் எதிர்பார்த்த வாழ்வு அமையவில்லை.

இன்று நடந்துகொண்டிருக்கின்ற விடயங்களையும் அவதானித்துக்கொண்டு நாங்கள் அடுத்தகட்ட நகர்வுகளுக்குத் தயாராக வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த வகையிலே, இப்பிரதேசத்தில் எவ்வாறாக நாங்கள் மக்களின் எழுச்சியை ஏற்படுத்தி எதிரியின் இன்றைய அரசியல் நகர்வு, இராணுவ நகர்வு என்பனவற்றை முறியடிக்கமுடியும். இதனை ஆராய்ந்து பொது அமைப்புகள் ஒரு தெளிவான முடிவுகளை எடுத்து, நாங்கள் எதிர்கொள்ளும் அரசியல் நகர்வுகளுக்கு ஏற்ற வகையில் எமது மக்களைத் தயார்ப்படுத்தல் வேண்டும். இதன்மூலம் எதிர்காலத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் சதிகளை முறியடிக்க வேண்டும் என இங்கு கூடியுள்ள சகல அமைப்புகளையும் கேட்டுக்கொள்கிறேன் என்று அவர் தெரிவித்தார்.

தூயவன் அரசறிவியல் போராளி நாகவேந்தன், முல்லை. மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் மூர்த்தி, முல்லை. மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் அணியழகன், கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் தயா ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த சகல பொது அமைப்புகளும் கலந்துகொண்டன. (த-341)

## மாங்குளம் வீதியில் யானைகள் தொல்லை

புதுக்குடியிருப்பு,ஜூன்14

ஒட்டுசுட்டான், மாங்குளம் வீதியில் யானைகளின் தொல்லை அதிகரித்து வருவதாகப் பொதுமக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மாலை 5 மணி முதல் இரவு 12 மணிவரை இந்த யானைகள் வீதியில் நடமாடுகின்றன எனவும், இதனால், இவ்வீதிவழியாக இரவில் பயணஞ் செய்வோர் மிகுந்த பயத்துடன் செல்லவேண்டியுள்ளதாகவும் - தெரிவிக்கப்பட்டது. (த-410-353)

## கால்நடை மருந்து விற்பனை நிலையம் திறப்பு

கால்நடைகளுக்கான மருந்து உணவுவிற்பனை நிலையம் ஒன்று கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது. கிளிநொச்சி 155ஆம் கட்டைப் பகுதியில் கடந்த 11ஆம் திகதி காலை 10 மணியளவில் இந்த நிலையத்தின் திறப்புவிழா நடைபெற்றது. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப பொறுப்பாளர் சி.கரிகாலன் இந்த விற்பனை நிலையத்தை நாடாவெட்டித் திறந்துவைத்தார்.(த)

# விசுவமடு பொதுமயானத்தை புனரமைக்கக் கோரிக்கை

விசுவமடு,ஜூன்14

பெரும்பற்றைக்காடாகக் காட்சிதரும் விசுவமடு மயானத்தைப் புனரமைப்புச் செய்துதருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

விசுவமடுப் பிரதேசத்தில் பரந்தன் - முல்லைத்தீவு, பிரதானசாலையில், 12ஆம் மைல் கல் அருகே இருக்கும் விசுவமடு, பொதுமயானம் பல ஆண்டுகளாகப் புனரமைப்பு மேற்கொள்ளப்படாமல் இருக்கிறது.

இந்த மயானம் பற்றைகள் வளர்ந்து மூடப்பட்ட நிலையில் இருப்பதால் மயானத்தில் உடல்களைப் புதைக்கும்போது பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டுவருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

சடலங்களைப் புதைப்பவர்கள் - அரைகுறையாகக் கிடங்குவெட்டிப் புதைப்பதால் மயானத்துக்கு அருகில் உள்ளவர்கள் பல நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றார்கள் எனக் கூறப்படுகிறது.

சடலங்களை எரியூட்டுவதற்கான இடமின்றி காடுகள் வளர்ந்து காணப்படுவதால் தகனக்கிரியைகளை மேற்கொள்ளமுடியாமல் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை எடுத்துச் செயற்பட்டு மயானத்தைப் புனரமைக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-352)

# கிளிநொச்சி மாவட்டத்தில் விபத்துக்கள் குறைகின்றன

கிளிநொச்சி,ஜூன்14

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த நான்கு மாதகாலத்தில் மிகவும் குறைந்த அளவிலான வீதி விபத்துக்களே இடம்பெற்றுள்ளதாக தமிழீழ காவல் துறையின் கிளிநொச்சி மாவட்ட புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த தை மாதம் 15 வீதி விபத்துகள் இடம்பெற்றன. அவற்றில் ஒருவர் மட்டுமே மரணமடைந்துள்ளார்.

மாசி மாதத்தில் 8 விபத்துக்களும் பங்குனி மாதத்தில் 12 விபத்துகளும் சித்திரை மாதத்தில 7 விபத்துக்களுமே இடம்பெற்றுள்ளன.

இவ் விபத்துக்கள் கூட உயிரிழப்புகள் அற்ற சிறிய விபத்துகள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வீதி ஒழுங்கு நடைமுறைகளை செயல்படுத்துவதில் மிகவும் இறுக்கமான செயற்பாடுகளை தமிழீழ காவல்துறையின் கடைப்பிடித்து வருகின்றமையே இவ் விபத்துகள் குறைந்து செல்லக் காரணம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.(த-86)

## சுனாமி நிவாரணப் பணிகளுக்காக

# முல்லை. மாவட்ட அரச அதிபருக்கு மீனவர் சமாசம் வாழ்த்துச்செய்தி

புதுக்குடியிருப்பு,ஜூன்14

அண்மையில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளப்பரிய பணிகளைச் செய்துவரும் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரின் சேவையைப் பாராட்டி யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்தினால் வாழ்த்துச்செய்தி ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர் சமாசங்களின் சமாசத்தினால் அரச அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள வாழ்த்துச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த வருட இறுதியில் பேரலையென வந்து தமிழீழத்தின் கரையோரமெங்கும் அகோரத் தாண்டவமாடிய சுனாமி அனர்த்தத்தினால், செய்வதறியாது தவித்துநின்ற முல்லை. மாவட்ட கரையோர மக்களின் துயர்துடைக்கத் தாங்கள் ஆற்றிய சேவையை அறிந்தோம்.

உதவிவழங்க வந்த உயர் அதிகாரிகள் மன்றத்திலே, தங்களால் வழங்கப்பட்ட தகவல்களையும், தரவுகளையும், புள்ளிவிவரங்களையும் அறிந்து மக்கள் பாராட்டியதை அறிந்து பெருமைப்படுகின்றோம்.

தங்களின் தன்னிகரில்லாத சேவையைப் பாராட்டி முல்லை. வாழ் மக்கள் விழாவெடுத்ததை அறிந்து உள்ளம் பூரிப்படைந்தோம்.

மக்கள் துயர் துடைக்கும் பணியில் மேலும் பல ஆண்டுகள் சேவை செய்து பேரும் புகழும், பெரும் பதவியும் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டும் என்று வாழ்த்துகின்றோம் - என்றுள்ளது. (த-353-410)




## பொருண்மிய நிறுவன இணைப்பாளர்களுக்கு பயிற்சி வகுப்பு

பரந்தன்,ஜூன்14

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதேச மற்றும் மாவட்ட இணைப்பாளர்களுக்கான பயற்சி வகுப்பு கடந்த 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் வட்டக்கச்சி மாதிரிப் பண்ணையில் திட்டமிடல் செயலர் சி.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

முதல்நாள் நிகழ்வில் தென்னை அபிவிருத்தியும் தென்னை அபிவிருத்திச்சபையின் நடவடிக்கையும் என்ற தலைப்பில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்களான மகாலிங்கம், தனிநாயகம் ஆகியோரும் -

பனை அபிவிருத்தியும் பனை அபிவிருத்திச்சபையின் வேலைத்திட்டங்களும் எனும் தலைப்பில் பனை அபிவிருத்திச் சபை முல்லை. மாவட்ட இணைப்பாளர் தர்மகுலசிங்கமும் கருத்துரை வழங்கினர்.

இரண்டாம் நாள் நிகழ்வில் விவசாயத் திணைக்களமும் அதன் செயற்பாடுகளும் என்ற தலைப்பில் முல்லை. மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் கோகுலதாசனும் நீர்ப்பாசனத் திணைக்களமும் - வேலைத்திட்டங்களும் என்ற தலைப்பில் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் வினோதராசா, நீர்ப்பாசனப் பொறியியலாளர் கந்தசாமி, பிரதம நீர்ப்பாசனப் பொறியியலாளர் நவநேசன், நீர்ப்பாசனப் பொறியியலாளர் கிருஸ்ணகுமார் ஆகியோரும் -

'கிராமிய அபிவிருத்திவங்கியும் அதன் செயற்பாடுகளும்' என்ற தலைப்பில் கிராமிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ப.விஜிதரன்-

'கால்நடை அபிவிருத்தி சுகாதாரத் திணைக்களமும், கால்நடை அபிவிருத்தியும்' என்ற தலைப்பில் முல்லை. மாவட்ட அரச கால்நடை வைத்தியர் கஜரஞ்சனும் கருத்துரை வழங்கினர்.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிர்வாகத் துணைப்பொறுப்பாளர் சு.சின்னண்ணை ஆகியோரும் கருத்துரை வழங்கினர். (த்-352)

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் விதைநெல்

## பசுமை வேளான் நிறுவனம் வழங்கியது

பரந்தன்,ஜூன்14

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகளின் நன்மைகருதி மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் செயற்படும் பசுமை வேளான சேவை நிறுவனம் இந்த வருடத்துக்கான சிறுபோக நெல் உற்பத்திக்காக விவசாயிகளுக்கு 40லட்சம் ரூபா பெறுமதியான உள்ளீடுகளைக் கடனாக வழங்கியுள்ளன.

308 பயனாளிகளுக்கு இந்த விதைநெல் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டது என கிளிநொச்சி மாவட்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப பொறுப்பாளர் மு.செந்தில் தெரிவித்துள்ளார்.(த-352)

# கௌசல்யன் நடமாடும் மருத்துவப் பிரிவின் இரண்டாம் கட்ட சேவை பாலமோட்டையில்

புளியங்குளம்,ஜூன்14

தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் மிகவும் பின்தங்கிய இடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு சேவை செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டுவரும் லெப். கேணல் கௌசல்யன் நடமாடும் மருத்துவ சேவை தனது 2 ஆவது நடமாடும் சேவையை கடந்த 10ஆம், 11 ஆம் திகதிகளில் பாலமோட்டை கிராமசேவகர் பிரிவில் நடத்தியது.

முதல்நாள் நிகழ்வாக மருத்துவர்கள் தலைமையில் ஐவர் கொண்ட குழுக்கள் வீடு வீடாகச் சென்று சுகாதார அறிவுரைகளை வழங்கின.

நோயாளிக்கு மருந்துகளும் வழங்கப்பட்டன. அத்துடன் பாடசாலைகளில் மாணவர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகளும் சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நாள் வீட்டுத்தரிசிப்புகளும் சிறப்பு மருத்துவ சேவைகளும் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமருத்துவம், பற்சிகிச்சை, கண் சிகிச்சை, நவீன ஆய்வுகூடசேவை, சாதாரண சத்திர சிகிச்சைகள் என்பன மேற்கொள்ளப்பட்டன. 541 பேர் இந்த சேவைகளைப் பெற்றுக் கொண்டனர்.

மேற்படி சேவையில் முதல்நாள் ஆரம்ப நிகழ்வு வவுனியா மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பொது ஈகச்சுடரினை மருத்துவக் கலாநிதி எழுமதி கரிகாலன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி விக்கிரமன் ஏற்றிவைத்தார்.

லெப்.கேணல் கௌசல்யன் உருவப்படத்திற்கான ஈகச்சுடரினை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். மலர்மாலையினை மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகா அணிவித்தார். தொடர்ந்து சிறப்புரையினை மருத்துவக் கலாநிதி ஓவியன் வழங்கினார்.

இரண்டாம் நாள் ஆரம்ப நிகழ்வு மருத்துவ போராளி இரும்பொறை தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பொது ஈகைச்சுடரினை மருத்துவக் கலாநிதி கலை ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியினை களமருத்துவப் பொறுப்பாளர் மனோஜ் ஏற்றிவைத்தார்.

ஈகைச்சுடரினை மகளிர் மருத்துவப் பொறுப்பாளர் அருந்தா ஏற்றினார். கௌசல்யனின் உருவப்படத்திற்கான மலர்மாலையினை தமிழீழ சுகாதார சேவைப்பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி விக்கிரமன் அணிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் தோட்டச் செய்கைக்கான விதைகளும் அன்றையதினம் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. அத்துடன், வவுனியா கிராமிய அபிவிருத்தி வங்கி வறிய விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வறிய மற்றும் போசாக்குக் குறைந்த குழந்தைகளுக்குப் பால்மா உட்படப் பல உதவிப்பொருள்களை வழங்கியது.

மேற்படி நிகழ்வுகளை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வந்திருந்து பார்வையிட்டதுடன், மக்களுடனும் போராளிகளுடனும் உரையாடிச் சென்றார்.

தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் றீகன், அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் நளன், தியாகதீபம் திலீபன், மருத்துவ சேவைப் பொறுப்பாளர் நாயகன் உட்படப் பல முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர். மேற்படி கிராமசேவகர் பிரிவில் சுமார் 475 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரம் பேர் வரை வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-355)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

விற்பனையில் சாதனை செய்த 'இது இந்து மதம்' நூலின் ஆசிரியர் 'சாமிஜி' எழுதிய புதிய புத்தகம் 'கோயில் பூசைகள் தமிழாக வேண்டும்' விற்பனைக்குண்டு. விலை ரூபா 80/- தொடர்பு: பரணன், 138, ராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 222 2365.(36540)

## வீடு விற்பனைக்கு

பல்லப்பை, புலோலி தெற்கு, புலோலி என்ற இடத்தில் நல்ல சுற்றாடலில் விசாலமான காணியுடன் சேர்ந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P. 077 3164361. (36538)

## காணி விற்பனைக்கு

இராசபாதை றோட், கோண்டாவிலில் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: பொ.சுஜந்தன், T.P.: 0773053011. (36427)

## உடன் விற்பனைக்கு

பாவனையிலுள்ள கொம்பியூட்டர், மொனிற்றர், எப்சன் பிறிண்டர் LQ 300+ ஓடியோ டெக் (AKAI) பனசொனிக் ரெலிபோன் றிசீவர், ஈ.குலைசர் விற்பனைக்குண்டு. தொடர்பு: அபிராமி, இல.768, K.K.S றோட், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். T.P. 8044. (36470)

## தவறிவிட்டது

விழிசுட்டி சங்கானை மேற்கு, சங்கானையை சேர்ந்த பாலசிங்கம் சத்தியசீலன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இலக்கம் 702980534V யாழ்ப்பாணத்துக்கும் சங்கானைக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (36526)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் நாளை (15.06.2005) புதன் மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி., P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி., தாரகை, முதலாம் கட்டை, பருத்தித்துறை. T.P.: 222 2867, 222 3529. (36535)

## தேவை

நல்ல நிலையிலுள்ள Hero Honda Street மோட்டார் சைக்கிள் ஒன்று தேவை. விரும்பின் மிக நல்ல நிலையிலுள்ள Hero Honda Splendorஇற்கு மாற்றிக்கொள்ளலாம். தொடர்பு: T.P.: 0777147036. (36513)

## மணப்பெண் தேவை

1973இல் பிறந்த அனுஷம் 4ஆம் வீட்டில் தோஷமற்ற செவ்வாய், மொத்த கிரகபாவம் 20½ உள்ள யாழ்.இந்து கௌவர குடும்பம் அரச புலமைப் பரிசில் வெளிநாட்டில் கணனி டிப்ளோமா பட்டம் பெற்ற அரச உத்தியோகத்தருக்கு மணப்பெண் தேவை. தொடர்பு: 0777 - 251979, 021 222 7302.

(36522)

## விலங்கு வேளாண்மை விருத்தி குறித்த கூட்டம்

கோண்டாவில்,ஜூன்14

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களில் விவசாய விலங்கு வேளாண்துறையினை மீளக்கட்டியெழுப்புதவற்கான கூட்டம் கடந்த 3ஆம் திகதி திருநெல்வேலி விவசாயப் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ். செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழக விவசாய பீட விரிவுரையாளர், கெயர் நிறுவனப் பிரதிநிதிகள், பருத்தித்துறை கால்நடை வைத்தியர், சுனாமி அனர்த்த செயலணி உத்தியோகத்தர்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின்போது கெயர் நிறுவனம் உதவித்திட்டங்கள் வழங்க முன் வந்ததுடன், அவற்றை ஆழிப்பேரலை அனர்த்த செயலணி ஊடாக நடைமுறைப்படுத்துவதற்கும் இணக்கம் காணப்பட்டது.

(எ-49)

## வேலைக்கு ஆள் தேவை

எமது தேவஸ்தானத்தில் பல வேலைகளையும் பொறுப்பாக செய்யக்கூடிய வேலையாள் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிட வசதிகள் ஒழுங்கு செய்துதரப்படும்.

உடன் நேரில் வரவும்.

- தர்மகர்த்தா
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
சாவகச்சேரி

(36536) (21-16-34)

# இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Infomation Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

2005 A/L மாணவர்கள் pending results உடன் விண்ணப்பிக்கலாம்.

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 0777-767818 / (011)4512591** For prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com

# 31ஆம் நாள் சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



கலைஞானகேசரி
அமரர் நாகமுத்தன் விசுவலிங்கம்
(நயினாதீவு)

(சமாதான நீதிவான், ஷைவப்புலவர், பிரசித்த நொத்தாரிசு, ஓய்வுபெற்ற அதிபர், சித்தாந்த பண்டிதர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய அறங்காவலர், நயினாதீவு மத்திய கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர், தீவக மோட்டார் படகுச் சங்க முன்னாள் ஸ்தாபகர், புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ.சங்க முன்னாள் நெறியாளர், ஸ்ரீ நாகபூஷணி அம்மன் யாத்ரீகர் தொண்டர் சபை ஸ்தாபகர்)

**தோற்றம்** **01-08-1921**

**மறைவு** **17-05-2005**

**அன்புடனும் பண்புடனும் எமை வளர்த்து ஆளாக்கிய உங்களது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி தாயைப் பிரார்த்திக்கிறோம்.**

கடந்த 17-05-2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 16-06-2005 ஆனிமாதம் 2ஆம் நாள் வியாழக்கிழமை காலை 6 மணிக்கு நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக் கரையிலும் தொடர்ந்து 16-06-2005 முற்பகல் 11 மணிக்கு சபிண்டீகரணக் கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அன்று நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் மறைந்த செய்தியறிந்து எமது இல்லம் வந்து, எம் வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டதோடு, இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மலர்வளையம் வைத்து மலரஞ்சலி செலுத்தியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோருக்கும் தொலைபேசி, தந்தி, பத்திரிகை மூலம் அனுதாபங்கள் தெரிவித்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம்நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி **வி.நாகம்மா** (மனைவி)
மக்கள்: **வி.இராசநாயகம்** (தாதிய உத்தியோகத்தர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)
**வி.தனிநாயகம்** (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், தீவக வலயம்-வேலணை)
திருமதி **தி.சியாமளாதேவி** (ஆசிரியை, தமிழ் மகாவித்தியாலயம், தலவாக்கல)
திருமதி **தி.முத்துலட்சுமி** (ஆசிரியை, கனடா)
திருமதி **கு.இரத்தினதேவி** (ஆசிரியை, சைவப்பிரகாச வித்தியாலயம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்)
திருமதி **நி.உமாதேவி** (ஆசிரியை - கனடா)

மருமக்கள்:
திருமதி **இ.மகாலட்சுமி**, திருமதி **த.சத்தியபாமா**, திரு.**பொ.தியாகமணி** (கணக்காளர், பெருந்தோட்டக் கம்பனி லிமிட்டட், தலவாக்கல)
திரு.**சொ.திவாகரன்** (ஆசிரியர் - கனடா)
திரு.**இ.குலசிங்கம்** (கிராம அலுவலர், நயினாதீவு)
திரு.**ம.நிபரஞ்சன்** (கனடா)

**5ஆம் வட்டாரம், நயினாதீவு.** (36531)(50)

# அஸ்ரா கிண்ணத்துக்கான போட்டிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூன் 14

'அஸ்ரா' கிண்ணத்திற்காக அகில இலங்கை ரீதியில் பாடசாலை அணிகளுக்கு இடையிலான 17 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டச் சுற றுப்போட்டி நாளை புதன்கிழமை ஆரம்பமாகிறது.

இப்போட்டியில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம்வருமாறு:-

'ஏ - பிரிவு'

❖ சென். பற்றிக்ஸ் எதிர் கொக்குவில் இந்து. (சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானம்)
❖ சென்.ஜோன்ஸ் எதிர் யாழ்.இந்து. (சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்)
❖ பருத்தித்துறை ஹாட்லி எதிர் சுழிபுரம் விக்ரோறியா (ஹாட்லிக் கல்லூரி மைதானம்)

'பி - பிரிவு'

❖ ஸ்கந்தா எதிர் யாழ்.மத்திய கல்லூரி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானம்)
❖ கிளிநொச்சி ம.வி.எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் (கிளிநொச்சி மகா வித்தியாலய மைதானம்)
❖ யூனியன் எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி (யூனியன் கல்லூரி மைதானம்).

15 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள யாவும் எதிர்வரும் சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

இப்போட்டியில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

'ஏ - பிரிவு'

❖ சுழிபுரம் விக்ரோறியா எதிர் நெல்லியடி மத்திய ம.வி. (விக்ரோறியாக் கல்லூரி மைதானம்)
❖ உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் எதிர் பெரியபுலம் ம.வி. (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மைதானம்)

'பி - பிரிவு'

❖ சென்.ஜோன்ஸ் எதிர் ஹாட்லி (சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானம்)
❖ கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ்.மத்திய கல்லூரி (கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானம்)

'சி - பிரிவு'

❖ கனகரத்தினம் மத்திய ம.வி. எதிர் யாழ் இந்து (கனகரத்தினம் மத்திய ம.வி. மைதானம்)
❖ மகாஜனா எதிர் புத்தூர் விக்கினேஸ்வரா (மகாஜனா மைதானம்)
❖ யாழ்ப்பாணக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்து (யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்).(த-190)

# பச்சிலைப்பள்ளிப் பிரதேச கழகங்களிடையே போட்டி

பளை, பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக் கிடையேயான விளையாட்டு விழா நிகழ்வுகள் அண்மையில் பளை மத்திய கல்லூரி விளை யாட்டு மைதானத்தில் பளைப் பிரதேச செயலா ளர் ச.சிவசிறி தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் பொதுச்சுடரினை பெருந்தோட் டப் பகுதிப் பொறுப்பாளர் சொலைமன் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை பளைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப் பாளர் அ.கரிகாலன் ஏற்றிவைத்தார்.

கருத்துரைகளை - கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் ந.வேதநாயகன் மற்றும கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழங் களின் பொறுப்பாளர் ராஜா ஆகியோர் வழங் கினர்.

இந்த விளையாட்டுப் போட்டிகளில் பளை சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக் கழகம் 291 புள்ளிகளைப் பெற்று, முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (த-352)



பின்தங்கிய பிரதேசப் பாடசாலையான வேணாவில் சிறிமுருகானந்த வித்தியாலயத்திற்கு தமிழீழ மாணவர் அமைப்பு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை வழங்கியது.

பாடசாலை மாணவரிடம் முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் மயூரன் விளை யாட்டு உபகரணம் கையளிப்பதை படத்தில் காணலாம். *(படம்: புதுக்குடியிருப்புச் செய்தியாளர்)*

# கிளித்தட்டு, கயிறிழுத்தல் போட்டிகளில் வெற்றியீட்டிய பாடசாலைகள்

முல்லைத்தீவு,ஜூன்14

தமிழீழ மாணவர் எழுச்சி நாளை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட மாணவர் அமைப்பினரால் புதுக்குடியிருப்பு, உடையார்கட்டுப் பிரதேசங் களுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக் கிடையே பிரதேச ரீதியாக கிளித்தட்டு, கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்தப் போட்டிகளில் வெற்றிபெற்ற பாட சாலைகளின் விவரம் வருமாறு:-

**புதுக்குடியிருப்பு**

**கிளித்தட்டு**

**ஆண்கள்** - புதுக்குடியிருப்பு றோ.க.வித்தி யாலயம், விக்னேஸ்வரா வித்தியாலயம், முரு கானந்தா வித்தியாலயம்.

**பெண்கள்** - விக்னேஸ்வரா வித்தியாலயம், கணேச வித்தியாலயம், முருகானந்தா வித்தி யாலயம்.

**கயிறு இழுத்தல்**

**ஆண்கள்** - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, விக்னேஸ்வரா வித்தியாலயம், முருகானந்தா வித்தியா லயம்

**பெண்கள்** - விக்னேஸ்வரா வித்தியால யம், புதுக்குடியிருப்பு ம.வி., அரசரத்தினம் தமிழ் வித்தியாலயம்.

**உடையார்கட்டு**

**கிளிதட்டு**

**ஆண்கள்** - சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை, குரவில் அ.த.க. பாடசாலை, உடையார்கட்டு மகா வித்தியாலயம்.

**பெண்கள்** - உடையார்கட்டு மகாவித்தி யாலயம், குரவில் அ.த.க. பாடசாலை, வள்ளி புனம் அ.த.க. பாடசாலை.

**கயிறு இழுத்தல்**

**ஆண்கள்** - உடையார்கட்டு மகாவித்தி யாலயம், சுதந்திரபுரம் அ.த.க.பாடசாலை, குரவில் அ.த.க.பாடசாலை.

**பெண்கள்** - குரவில் அ.த.க.பாடசாலை, உடையார்கட்டு மகாவித்தியாலயம், வள்ளிபுனம் அ.த.க.பாடசாலை. (3-410-353)

# உதைபந்தாட்டத்தில் வெற்றிபெற்ற அணிகள்

முல்லைத்தீவு,ஜூன்14

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக் கிடையே நடைபெற்ற மாவட்டமட்ட உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 17 வயதுப் பிரிவில் கொக்கிளாய் அ.த.க. பாடசாலையும், 19 வயதுப்பிரிவில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியும் வெற்றிபெற்று மாகாணமட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் அண்மையில் புதுக்குடியிருப்பு மத்திய கல் லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங் களையும் பெற்ற அணிகளின் விவரம் வரு மாறு:-

**17 வயதுப்பிரிவு**

கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, புதுக்குடி யிருப்பு மத்திய கல்லூரி, மல்லாவி மகா வித்தியாலயம்.

**19வயதுப்பிரிவு**

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, கற் சிலைமடு மகா வித்தியாலயம், பாலிநகர் மகா வித்தியாலயம். (த-410,353)

# பௌத்த பேரினவாதத்தைக் கண்டித்து யாழ்.பல்கலை மாணவர்...



ஊர்வல ஆரம்பத்தின்போது...



பறை அதிர கொடும்பாவி தரையில் இழுக்கப்படுகிறது...



பிலாக்கணம் தொடுத்து ஒப்பாரி...



மாணவர் கடல்...



கொள்ளிக் குடத்துடன் ஒப்பாரி...



பிரேத ஊர்வலத்தில் எம்.பிமார்...



டக்ளஸின் கொடும்பாவி...



பௌத்த கொள்கை அடங்கிய பிரேதப் பெட்டியும்.. கொடும்பாவியும்...



பேரினவாதக் கொள்கைகள் எரிகின்றன...

படங்கள்: பிரபா

### எதிர்ப்புகளைச் சமாளிக்கும் விதத்தில்

# பொதுக்கட்டமைப்பை ஆதரிக்கும் செயற்பாடுகளை முடுக்க முயற்சி

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவான செயற்பாடுகளை முடுக்கிவிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இன்று செவ்வாய்க் கிழமை கொழும்பில் கூடும் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவான சக்திகள் இனி எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றித் தீர்மானிக்கவுள்ளன.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் கூட்டுத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பிரதி அமைச்சர்கள், சங்கப் பிரதிநிதிகள் மற்றும் கொழும்பிலுள்ள தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் இன்று ஒன்றுகூடி பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாகவும், இதுவிடயத்தில் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ஆதரவாகவும் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

பொதுக்கட்டமைப்புக்கு எதிரான தரப்புகளின் செயற்பாடுகள் தீவிரமடைந்திருக்கும் நிலையில் ஆதரவுச் சக்திகளைத் திரட்டி ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்துவதற்கான இந்த முஸ்தீபு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாக ஊர்வலங்கள், விளக்கக்கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என்பனவற்றை நடத்துவது குறித்து இந்தக்கூட்டத்தில் ஆராய்ந்து தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று மேல் மாகாண சபை ஆளுநரும், பொதுஜனஐக்கிய முன்னணிக் கூட்டுத் தொழிற்சங்க உபதலைவருமான அலவி மௌலானா தெரிவித்தார். (எ-க)

# பொதுக்கட்டமைப்பிலுள்ள விடயங்களை பகிரங்கப்படுத்த வேண்டும் ஜனாதிபதி

### ஜாதிக ஹெல உறுமய வலியுறுத்து

கொழும்பு,ஜுன்14

பொதுக்கட்டமைப்பில் உள்ளடங்கியுள்ள விடயங்களை நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி பகிரங்கப்படுத்தவேண்டும் என்று ஜாதிக ஹெறல உறுமய வலியுறுத்தியுள்ளது.

அக்கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் வண.அத்துரலியே ரத்னதேரர் கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இதனை வலியுறுத்தினார்.

விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைபு உடன்படிக்கையில் கையெழுத்திடுவதற்கு முனர் அதனைப் பௌத்த உயர்பீடங்களின் மகாநாயக்கர்களிடம் காண்பிக்கமுடியும் எனின், அதனை ஏன் பிரதமருக்கோ நாடாளுமன்றத்திற்கோ காட்டமுடியாது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

"ஜனாதிபதி இந்த நாட்டின் தலைவி. மக்களால் தேர்தெடுக்கப்பட்ட தலைவர் அவர். அரசின் செயலாளரே பொதுக்கட்டமைப்பில் கையெழுத்திடுவார் என்று அவர் சொல்கிறார். புலிகளுடன் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு முன்னர் அதனை மகாநாயக்கர்களிடம் காட்டமுடியுமெனின் ஏன் அதனைப் பிரதமரிடம் காட்டமுடியாது? ஏன் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கமுடியாது?" - என்றார் வண. அத்துரலியே ரத்னதேரர். (எ-8)

## கண்டியில் ஒருகடை நொறுக்கப்பட்டது

கொழும்பு, ஜுன்14

கடந்த வெள்ளிக்கிழமை கண்டி நகரில் சில கடைகளை மூடும்படி வற்புறுத்தியதாகக் கூறப்படும் குறிப்பிட்ட கும்பல் ஒன்றைப் பற்றிய விசாரணைகளை கண்டிப் பொலீஸார் ஆரம்பித்திருக்கிறார்கள்.

கண்டியில் தலதா வீதியிலுள்ள கடையொனறு அடித்து நொறுக்கப்பட்டதாகவும் பொலீஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் கண்டியில் சற்று பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

கடைகளை மூடும்படி வற்புறுத்திய கும்பல் மீது நடவடிக்கை எடுக்கப் பொலீஸார் தயாராய் இருந்த போதிலும் பாதிக்கப்பட்ட எவரும் - முறைப்பாடு செய்யவோ சாட்சியமளிக்கவோ முன்வருகிறார்களில்லையென்று பொலீஸார் கூறினார்கள். (ப)


NET வட கிழக்கு தொழில் நுட்பம்
NORTH EAST TECHNOLOGIES

புத்தம் புதிய கணனிகள், மீளமைக்கப்பட்ட கணனிகள், கையடக்கத் தொலைபேசிகளின் விற்பனை சகல வித திருத்த வேலைகள் மற்றும் Un Locking வசதிகளுக்கு, விரையுங்கள்......
NET காட்சியறைக்கு!!

புத்தம் புதிய PIV-2.26GHz, 2.8GHz (Hyper Threading), 3.0GHz(HT-Technology) கணனிகள்,
மீளமைக்கப்பட்ட PII, PIII - IBM, Dell, Compaq, Samsung கணனிகள்;
1000MHZ,128MB RAM,10GB HDD
866MHZ,128MB RAM,20GB HDD
600MHZ,64MB RAM,8GB HDD
450MHZ,64MB RAM,6GB HDD

Mobile Phone Repair Technology Diploma Course-3 வது பிரிவு ஆரம்பம் - 20.06.2005
20 பேர் மட்டுமே. பதிவுகளிற்கு முந்துங்கள்

1வருட அபான்ஸ் உத்தரவாதத்துடன் கூடிய புத்தம் புதிய மொபைல் போன்கள்
மற்றும்
சகலவித கணனிகள், மொபைல் போன்களின் சகல வித திருத்த வேலைகளை குறைந்த செலவில் செய்து கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்
North East Technologies, 34, Saddanathar Rd,Nallur,Jaffna
Tele: 021-2223786, 0777-708498(Hotline).





உ
உரும்பிராய்
ஓடையம்பதி கற்பகவிநாயகர் ஆலயம்
7ஆம் திருவிழா விஞ்ஞாபனம்

விநாயக அடியார்களே!

இன்று (14-06-2005) செவ்வாய்க்கிழமை பகல் 11.00 மணிக்கும் இரவு 7.00 மணிக்கும் இடம்பெறும் வசந்த மண்டபப்பூசைகளில் விசேட மேளக்கச்சேரிகள் இடம்பெறும். இரவு பூச்சப்பரத்தில் விநாயகப்பெருமான் வீதி உலாவருவார். அடியார்கள் இக்காட்சியைக் கண்டு விநாயகப் பெருமானின் அருளைப் பெறுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

விசேட மேளக் கச்சேரிகள்

(1) நாதஸ்வர வித்துவான் இணுவையூர் N.R. கோவிந்தசாமியின் புதல்வர்கள்
(2) கோண்டாவில் நாதஸ்வர இசையருவி V.K. பஞ்சமூர்த்தி குழுவினர்
(3) கோண்டாவில் நாதஸ்வர மேதை V.K. கானமூர்த்தி குழுவினர்
(4) நல்லூர் P.S. பாலமுருகன் குழுவினர்

சிறப்புத் தவில் கச்சேரி

மறைந்தும் மறையாத இணுவையூர் தவில் மேதை N.R.சின்னராஜா அவர்களின் புதல்வன் N.R.S.சுதாகரன் அவர்களின் தவில் கச்சேரியும் இடம்பெறும்.

உரும்பிராய். K.K.தருமலிங்கம் குடும்பத்தினர்
(சி-43399)(26-11-38) (7ஆம் திருவிழா உபயகாரர்).


## நால்வர் திருவுருவச் சிலைகள் இன்று நகரில் திருவீதியுலா

யாழ்ப்பாணம்.ஜீன்14

அகில இலங்கை திருமுறை மன்றத்தின் ஏற்பாட்டில் நால்வர் திருவுருவச் சிலைகளினதும், பன்னிரு திருமுறைச் சுவடிகளினதும் வீதியுலா இன்று செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.நகரில் நடைபெறவுள்ளது.

யாழ்.சத்திரத்துச் சந்தி ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்தின் விசேட பூசைகள் நடைபெற்று, நால்வர் திருவுருவச் சிலைகள், திருவுருவச் சுவடிகள் என்பன வீதியுலாவாக எடுத்துவரப்பட்டு யாழ்.வில்லூன்றி விநாயகர் ஆலயத்தைச் சென்றடையும்.

அகில இலங்கை திருமுறை மன்றம் கடந்த ஏப்ரல் மாதம்தொடக்கம் ஆலயங்கள் தோறும் பன்னிரு திருமுறைகளை முற்றோதல் செய்து வருகின்றது.

முதலாந் திருமுறை முற்றோதல் யாழ்.நீராவியடி ஸ்ரீ ஜெயவீரகத்தி விநாயகர் ஆலயத்திலும், இரண்டாம் திருமுறை முற்றோதல் யாழ். சத்திரத்து ஸ்ரீ ஞானவைரவர் ஆலயத்திலும் நிறைவு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது திருமுறை முற்றோதல் வில்லூன்றி விநாயகர் ஆலயத்தில் நடைபெறும். (எ-204)

## எழுச்சிப்பேரவை சங்கம நிகழ்வு

கரவெட்டி.ஜீன் 14

வடமராட்சிக் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவை நடத்தும் சங்கம நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி ஸ்ரீ முருகன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.(எ-70-204)

## பண்டத்தரிப்பு தபாலகத்துக்கு தொலைபேசி

வலி.தென்மேற்கு.ஜீன் 14

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை முதல் தொலை பேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைபேசி இணைப்புக்காண கட்டணம் கட்டப்பட்டு சுமார் ஒரு வருடகாலத்தின் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமையன்று இணைப்பு வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டது.


தேவை

வானில் சென்று (சேல்ஸ்) விற்பனை செய்வதற்கு அனுபவமுள்ளவர்கள் தேவை.

தொடர்பு:
சிவா பிறதேர்ஸ்
246, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(36553)(38-11-13)


## துயர் பகிர்கின்றோம்

அமரர்
### கந்தையா குகதாசன்

கடும் உழைப்புக்கு முன் போராளியாய்
ஆசானுக்கு எடுத்துக்காட்டான ஆசிரியராய்
வன்னியில் நடைபெற்ற போராட்டத்தில் மக்களின் பங்காளியாய்
இடம்பெயர்ந்து தவித்த மாணவர்களுக்கு நல்வழிகாட்டியாய்
போராளிகளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்த சேவகனாய்
நல்லமனிதனாய் பண்பாளனாய் பழகியவனே
பல மாணவர்களின் உயர் பெறுபேற்றுக்குக் காரணமாக
இருந்த எங்கள் குகதாசன் ஆசிரியரின் சாவுச் செய்தி
எம்மையெல்லாம் நிலைகுலைய வைத்துள்ளது.
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

இரத்தினபுரம், கிளிநொச்சி. - அருள் மாஸ்ரர் குடும்பம்.

(36509)(38-11-13)

## மரண அறிவித்தல்கள்

### முத்தையா சோமசுந்தரம்



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா சோமசுந்தரம் நேற்று (13.06.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் திருநெல்வேலி முத்தையாவின் மகனும் இணுவில் துரையப்பா - இலட்சுமிப் பிள்ளையின் மருமகனும் சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும் ரவிமோகன் (கனடா), லீலாவதி (கோண்டாவில் கிழக்கு), சரோஜா (தலவாக்கொல்லை), ரவீந்திரன் (ஜேர்மனி), காலஞ்சென்ற உதயராணி மற்றும் ரவிச்சந்திரன், ரவிராசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பிரேமாலா (கனடா), மகாதேவன் (கோண்டாவில்), விக்கினேஸ்வரன் (தலவாக்கொல்லை), சாந்தினி (ஜேர்மனி), சுபாசினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிதுரா, நிஷான், நினோஜன் (கனடா), சுஜிபா, நிஷாந்தன், செந்தூரன் (கோண்டாவில்), சுஜன், துஷாந்தன், கிருஷாந்தன் (தலவாக்கொல்லை), றோகித்தா, அஜித்தா, ராகுலன், அஸ்வினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர் மற்றும் சிவஞானம்மா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் யோகம்மா (அமரர்), மதுரைநாயகம் (அமரர்), சிவலிங்கம் சிவயோகநாதன் (அமரர்), சிவானந்தன் (அமரர்), சிவநேசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சோமசுந்தரம் (அமரர்), சிவசண்முகம் ஆகியோரின் சகலனும்ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2005) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*குமாரலிங்கம் வீதி,*
*இணுவில்கிழக்கு,*
*இணுவில்.*

தகவல்:
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(36544)(42-38-11)

### திருமதி வைத்திலிங்கம் பாக்கியலட்சுமி (ராதா)



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் பாக்கியலட்சுமி நேற்று (13.06.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை வைத்திலிங்கம் (ஓய்வுபெற்ற உப அதிபர், யாழ். வைத்தீஸ்வரக்கல்லூரி) அவர்களது அன்பு மனைவியும், சிவபாக்கியம், அருள்நந்தி (பேராசிரியர், விவசாய பீடம், கிழக்கு பல்கலைக்கழகம்), சிவானந்தன் (தொலைத்தொடர்பு பரிசோதகர் S.L.T. கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவன்தாசன் (ஓய்வுபெற்ற கணக்காளர், தபால் திணைக்களம்), தவமணிதேவி (பிரதமநூலகர், கிழக்குப் பல்கலைக்கழகம்), சித்ரா (ஆசிரியை, கொழும்பு சென்.ஆன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற அன்னம்மா கந்தையா, தங்கரத்தினம் இராசையா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகானந் (உயர்தர மாணவன், யா.இ.க.), சாம்பவி (வின் சென்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், Dr.அமரசிங்கம், சற்குணராணி சோதிநாதன் (U.K), சத்தியசீலன் சரஸ்வதி (U.K), குணலக்ஷ்மி, காலஞ்சென்ற தயாநிதி, கருணாநிதி, யதார்த்தநாதன் (U.S.A), அருளாளன் (கனடா), யோகலக்ஷ்மி ஆகியோரின் அன்புச் சிறியதாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (15.06.2005) புதன்கிழமை காலை 10மணியளவில் கந்தர்மடத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக கோம்பையன் மணல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*84, பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
செ.சிவன்தாசன் (மருமகன்),
Prof. வை.அருள்நந்தி (மகன்),
வை.சிவானந்தன் (மகன்).

(36552)(38-11-13)

## நினைவஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலர் திரு.செ.ஸ்ரீனிவாசன் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னத்தம்பி செல்லமுத்து

அவர்கள் 2005.05.15 அன்றுகாலமானதையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

- ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(சி-43400) (42-11-38)

## கண்ணீர் அஞ்சலி

யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தின் அலுவலக ஊழியர் திரு.க.குணரத்தினம் அவர்களின் பாசமிகு மாமனார்

### ஐயன் யோகநாதன்

அவர்களின் மறைவையிட்டு நாம் மிக மனம் வருந்துகின்றோம். அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொள்வதோடு, கண்ணீர் அஞ்சலி செலுத்தி அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்
யா/மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்.

(36551)(38-11-13)

## ஜே.வி.பி. அரசை விட்டு வெளியேறினாலும்

# 30 ஆம் திகதிக்கு முன்னர் உடன்பாடு புலிகளுடன் என்கின்றார் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 14

ஜே.வி.பியினர் அரசைவிட்டு நாளை வெளியேறினாலும் பரவாயில்லை. எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் விடுதலைப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியே தீருவேன்.

- இவ்வாறு மீண்டும் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நேற்றுக்காலை ஜனாதிபதி மாளிகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை இரண்டு மணிநேரம் சந்தித்து உரையாடிய ஜனாதிபதி குமாரதுங்க, பொதுக்கட்டமைப்பு தொடர்பில் அவர்களுக்கு நீண்ட விளக்கமளித்தார்.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடும் ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேற்படி உறுப்பினர்கள் முழுமையான ஆதரவைத் தெரிவித்திருக்கின்றனர். அதேசமயம் இந்த விடயத்தினால் அரசு கவிழ்ந்துவிடும் சூழ்நிலை உருவாகியிருப்பது குறித்தும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

ஆனாலும், ஆட்சியிலிருந்து ஜே.வி.பி. வெளியேறுவது தொடர்பில் இந்தச் சந்திப்பில் கிஞ்சித்தும் அலட்டிக்கொள்ளாதிருந்த ஜனாதிபதி, அமைதி முயற்சிகளுக்குச் சிறந்த அடித்தளமிடும் இந்த முயற்சியில் யாரின் எதிர்ப்பையும் தாம் கவனத்திற்கொள்ளப் போவதில்லையென்றும், எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படுமென்றும் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியினரின் பல அந்தரங்க விடயங்கள் தம்மிடம் சிக்கியுள்ளன என்றும் அவற்றை விரைவில் தாம் அம்பலப்படுத்துவார் என்றும் அங்கு ஜனாதிபதி சூசகமாகக் குறிப்பிட்டார் எனத் தெரியவந்தது.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அதனை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுவிற்குச் சமர்ப்பித்து அதன் முழுமையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் நேற்று ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பதுளை மருத்துவமனையில் காரைநகர் வாசி மரணம்!

பதுளை,ஜூன்14

பதுளை சிறைச்சாலை பாதுகாவலர்களின் பாதுகாப்புடன் பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்தவரான காரைநகர்வாசி ஒருவர் அங்கு காலமானார்.

கந்தையா சுந்தரலிங்கம் (வயது 65) என்ற மேற்படி நபர், பதியதலாவ வைத்தியசாலையில் சிறிதுகாலம் முன்பாக சுகவீனத்துக்காகச் சிகிச்சை பெற்றுவந்தார். உதவிக்கு யாருமின்றி இருந்த அவர் குறித்து வைத்தியசாலை நிர்வாகம் பொலீஸாரிடம் தெரிவித்தது.

இதனையடுத்து அவரை பொலீஸார் மகியங்கனை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். அவரை கடந்த 10 ஆம் திகதிவரை தடுத்து வைக்கும்படி உத்தரவிட்டார். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த அவர் மீண்டும் சுகவீனமுற்றார். இதனையடுத்து பதுளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் அங்கு காலமானார்.

மேற்படி நபரின் சடலம் பதுளை மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

# வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மூன்றாவது கட்டமாகப் பின்வரும் இடங்களில் ஏற்றப்படவுள்ளது.

நாளை புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து 10 மணிவரை, யாழ்.வீதியிலுள்ள ஞானக்குழந்தை பாலர் பாடசாலைக்கு அருகிலும் முற்பகல் 10.30 மணியிலிருந்து 12.30 மணிவரை அத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்கு முன்பாகவும் - 2 மணியிலிருந்து 4 மணிவரை கல்வியங்காடு வன்னியசிங்கம் படிப்பகத்திலும் -

நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து 10 மணிவரை நல்லூர் இந்து விடுதி அலுவலக முன்றிலிலும் - விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (ஒ-13)

# காரைநகரில் நேற்று பலத்த காற்று

காரைநகர், ஜூன்14

காரைநகர் பகுதியில் நேற்று மாலை திடீரென பலத்தகாற்று வீசியது.

நேற்று மாலை 6 மணியளவில் வீசிய பலத்த காற்றினால் காரைநகர் அல்லின் வீதியில் உள்ள வீடொன்றின் மீது பனைமரம் வீழ்ந்தது.

இதேசமயம் பலகாடுப் பகுதியில் உள்ள வீடொன்றின் மீதும் பனைமரம் ஒன்று வேரோடு சாய்ந்து விழுந்தது. இந்தச் சம்பவங்களில் தெய்வாதீனமாக எவரும் பாதிப்படையவில்லை. (ஒ-13-73)

## உலக சுகாதார நிறுவனம் உதவி

உலக சுகாதார நிறுவனம் குடாநாட்டு வைத்தியசாலைகளில் பணிபுரியவென நான்கு 'எக்ஸ்றே' தொழில்நுட்பவியலாளர்களை அனுப்பிவைத்துள்ளது.

இந்த நால்வரில் இருவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கும். ஒருவர் தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைக்கும் மற்றுமொருவர் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலைக்கும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவிலிருந்து வந்தவர்களான இந்த நால்வருக்கும் உரிய வேதனத்தை உலக சுகாதார நிறுவனமே வழங்கவுள்ளது.

இவர்களின் சேவை நியமனம் வருடத்திற்கொருமுறை புதுப்பிக்கப்படுமெனவும் - இது போன்ற இன்னும் பல சேவைகளைத் தொடர உலக சுகாதார நிறுவனம் உத்தேசித்திருப்பதாகவும் அறியப்படுகிறது. (ஓ-15)

### கந்த முருகேசனார் நினைவுதினம்

மூதறிஞர் தென்புலோலியூர் கந்த முருகேசனாரின் 40 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று செவ்வாய்க்கிழமை புலோலியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்றைய தினம் மந்திகைச் சந்தியில் உள்ள கந்தமுருகேசனாரின் உருவச் சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு, நினைவுரைகள் இடம்பெறும். (ஓ-173)

## துயர் பகிர்கின்றோம்



**அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**

எமது வாழ்வகத்தின் பொருளாளர் திரு. பொ. கமலநாதன் (அதிபர் கொக்குவில் இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புத்தந்தை கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களின் துயரத்தில் வாழ்வக சமூகமும் பங்கு கொள்கின்றது. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*வாழ்வகம் விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்,*
*சபாபதிப்பிள்ளை வீதி,*
*சுன்னாகம்.* (C-43407) (54-12-14-17-25) வாழ்வக சமூகம்

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் கணித ஆசிரியை திருமதி சுதா ரமேஷ் அவர்களின் அன்புத் தந்தை

**டாக்டர் மயில்வாகனம் இராசையா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்,
யா/மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை.
(36554-14-17-25)

## கண்ணீர் அஞ்சலி

வேலணை அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியும் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி வடக்கு, அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை முன்னாள் டாக்டருமான

**டாக்டர் மயில்வாகனம் இராசையா**

அவர்கள் 12.06.2005இல் காலமாகிவிட்டார். அவரது மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலணை. (36557-14-17-25) வேலணை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

We Serve

எமது கழகத்தின் செயலாளரும் ஆரம்பகால உறுப்பினருமாகிய லயன்ஸ் பொன்னுத்துரை கமலநாதன் அவர்களின் தந்தை

**கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கொக்குவில். (36558-14-17-25) லயன்ஸ் கழகம், கொக்குவில்.

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**அமரர் சிறிஸ்கந்தராசா மயூரி**

*(மாணவி, சங்கானை சிவப்பிரகாச ம.வி – உ/த, 2006 கலைப்பிரிவு)*



*அன்னையின் மடியில்* 1986 . 06 . 24

*ஆண்டவன் அடியில்* 2005 . 05 . 01

*உன்நிழல் தன்னை நம்பி ஈன்ற தாய்*
*சகோதரர்கள் வாழ்ந்தவர்கள்*
*அன்போடும் பாசத்தோடும்*
*அரவணைத்து வாழ்ந்தவர்கள்*
*நின்னது பிரிவுகண்டு நெஞ்சினில் ஏக்கம்*
*கொண்ட நாளும் நாற்பத்தைந்து*
*சென்றாலும் உன் நினைவு எம்மைவிட்டு*
*நீங்கவில்லையே!*

இன்று (14.06.2005) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பழைய தபாற்கந்தோர் வீதி,*
*சங்கானை.* (36560-14-17-25) *அம்மா, அப்பா, அக்கா, சகோதரி.*


COMPUTER COURESE

2005 A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

உங்கள் பெறுபேறுகள் வரையான பொன்னான காலப்பகுதியை **IIS** நிறுவனத்துடன் இணைந்து கொள்வதன் மூலம் பயனுள்ளதாக்கிக் கொள்ளுங்கள். **IIS** நிறுவனம் தனது 10ம் ஆண்டு சிறப்புச் சலுகையாக இப்பிரிவுக்கு மட்டும் மிகக் குறைந்த கட்டணத்தில் கற்கை நெறிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது. **IIS** உடன் இணைந்துகொள்ளும் இவ் அரிய சந்தர்ப்பத்தினைத் தவற விடாதீர்கள். *மேலதிகவிபரங்களுக்கு 23.06.2005 பத்திரிகையில் எதிர்பாருங்கள்.*

இயக்குநர்,
**IIS** , யாழ்ப்பாணம்.

நாதன்ஸ் சினிமா — குளிரூட்டப்பட்டது — ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

"இன்டி பெண்டன்ஸ் டே" டைரக்டர் ரோலண்ட் எம்ரீச் மீண்டும் முத்திரை பதிக்கும் படைப்பில்!

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.) THE DAY AFTER TOMORROW (சினிஸ்) நாளை மறுநாள் (தமிழாக்கம்)

சுனாமி போன்ற அழிவுகளை சித்திரிக்கும்.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 62 ஆவது நாளாக ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த



காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பு.நே.)

சந்திரமுகி

அடுத்த வெளியீடு ஜித்தன்

ராஜா யாழ்ப்பாணம்

14 வரை

லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஸ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த

சூர்யா (சினிஸ்) ஆக்ஷன் படம்.

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30. (பு.நே.)

# தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி யாழ்.பல்கலையில் மாநாடு

## ஜூன் 21இல் இடம்பெறுகிறது

தென்மராட்சி, ஜூன்14

தென்னிலங்கையில் நிலவும் அரசியல் சூழ்நிலை குறித்த மாநாடும் தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையை வலியுறுத்தி அரசியல் நிலைப்பாட்டினை வெளிப்படுத்த எடுக்கவேண்டிய நடவடிக்கை தொடர்பான ஆய்வும் எதிர்வரும் 21 ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் இதனைத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுகள் தமிழ்த் தேசியத்தினுடைய உண்மையானதும், சுதந்திரமானதுமான நிலைப்பாட்டை இலங்கை அரசுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் வெளிக்காட்டுகின்ற நிகழ்வாக அமையும். அதேவேளை, எதிர்காலத்தில் நடைபெறவுள்ள மக்களெழுச்சிப் போராட்டங்களுக்கு வித்தாக இது அமையும். ஆகவே இதில் பங்குகொண்டு தமிழினத்தின் நியாயமான உரிமைப் போராட்டத்திற்கு ஜனநாயக வழியில் பங்களிப்புச் செய்து அதற்கு வலுச் சேர்க்க வேண்டும்.

இவ்வாறு ந.ரவிராஜ் எம்.பி. மேலும் தெரிவித்தார். (ஒ-8-117)

# சாகும்வரை உண்ணாவிரதம்: பிக்கு மீண்டும் தொடர்வாராம்

கொழும்பு,ஜூன்14

ஜனாதிபதி சந்திரிகா அரச படைப்பலத்தைப் பயன்படுத்தி அராஜக செயற்பாடுகளை மேற்கொண்டாலும் பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தும் தமது முன்னணியின் முடிவில் எந்த மாற்றமும் இல்லையென்று தேசிய பிக்குகள் முன்னணியின் பேச்சாளரான வண. உதித்த தேரர் நேற்றுப் பிற்பகல் உதயனுக்குத் தெரிவித்தார்.

கோட்டைரயில் நிலைய முன்றிலில் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தேசிய பிக்குகள் முன்னணி தேரர்கள் மீதும் பொலீஸார் நடத்திய கண்ணீர் புகைக்குண்டு வீச்சுத் தாக்குதல் மற்றும் இது தொடர்பான முன்னணியின் நிலைப்பாடு குறித்து உதித்த தேரர் மேலும் கூறியதாவது:-

எவருக்கும் இடையூறின்றி நாம் எமது உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தோம். ஆனால், மாணவர்களின் எதிர்ப்பு ஊர்வலத்தைக் கலைப்பது என்ற போர்வையில் பொலீஸார் எம்மீதும் தாக்குதல் நடத்தி அராஜகம், அட்டகாசம் புரிந்தனர். சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த வண. தம்பர அமிலதேரரை எதனால் நாம் அங்கிருந்து தூக்கிச்சென்றோம். இப்படிச் செய்வதன் மூலம் எமது சாகும்வரையான போராட்டத்தைத் தடுத்துவிடலாமென இவர்கள் நினைக்கின்றனரா? அப்படித் தடுப்பது சுலபமான விடயமல்ல.

அந்த முயற்சி ஒருபோதும் வெல்லாது. வண. தம்பர அமில தேரர் மீண்டும் தமது போராட்டத்தை தொடர்கிறார். அதனை அவர் கைவிடமாட்டார்.

- இவ்வாறு அவர் மேலும் கூறினார்.

## ஜே.வி.பி. ஆதரவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பௌத்த பிக்குமாரின் ஆசியைப் பெற்ற பல்கலைக்கழக மாணவர்கள் பின்னர் தமது ஊர்வலத்தை ஜனாதிபதி மாளிகையை நோக்கித் திருப்பினர்.

அகில இலங்கை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் துமிந்த நாகமுவவின் தலைமையில் சென்ற இந்த மாணவர்கள், கோட்டை ஹில்டன் ஹோட்டலுக்கு அருகில் சென்றதும் பொலீஸாரால் தடுத்துநிறுத்தப்பட்டனர். குறிப்பிட்ட பகுதி பாதுகாப்பு வலயமாகக் கருதப்படுவதால் மாணவர்கள் அந்த இடத்திலிருந்து கலைந்து செல்லவேண்டுமென்று பொலீஸார் ஒலிபெருக்கி மூலம் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால், அதனைக் கவனத்தில் கொள்ளாத மாணவர்கள், பொலீஸாரின் தடையையும் அறிவுறுத்தல்களையும் மீறி ஜனாதிபதி மாளிகையை நோக்கி முன்னேற ஆரம்பித்தனர்.

இதனையடுத்து. பவுஸர்களில் ஏற்கனவே தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த தண்ணீரை மாணவர்கள் மீது பொலீஸார் பீய்ச்சியடித்தனர். அத்துடன்; கண்ணீர்ப்புகைக் குண்டுப் பிரயோகத்தையும் குண்டாந்தடியடிப் பிரயோகத்தையும் மாணவர்கள் மீது பொலீஸார் சரமாரியாக மேற்கொண்டனர்.

இதனையடுத்து மாணவர்களை கோட்டை ரயில் நிலையப் பக்கமாக ஓடஓட விரட்டிய பொலீஸார், கோட்டை ரயில் நிலையத்திற்கு அருகில் வந்தும் மாணவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதலை நடத்தினர்.

பொலீஸாரின் இந்தத் தாக்குதலின் காரணமாகக் கோட்டை ரயில் நிலைய முன்றிலில் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் வண. தம்பர அமிலதேரர் மற்றும் அவருக்கு ஆதரவாக இருந்த பௌத் பிக்குமார் பலரும் பெரிதும் பாதிக்கப்பட்டனர். கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குதல் காரணமாக் வண. தம்பர அமில தேரர் பாதிக்கப்பட்டதையடுத்து உடனடியாக அவரை அவரது ஆதரவாளர்கள் தூக்கிக்கொண்டு பாதுகாப்பான இடத்துக்கு எடுத்துச்சென்றனர். இதனையடுத்து அருகிலிருந்த இதர பிக்குமார் கலைந்துசென்றனர்.

களேபரம் முடிந்த பின்னர் உண்ணாவிரமிருநத மேடைக்கு அவர் கொண்டுசெல்லப்பட்டார்.

**கைது**

ஜனாதிபதி செயலகப் பக்கமாக நடந்த களேபரத்தைத் தொடர்ந்து கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஒன்றுதிரண்ட மாணவர்கள் வீதியின் நடுவே அமர்ந்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்க ஆரம்பித்ததுடன், வன்முறைச் சூழலொன்றை ஏற்படுத்தும் வகையில் நடந்துகொண்டனர். இதனால் சீற்றமுற்ற பொலீஸார் உடனடியாக 25 மாணவர்களைக் கைதுசெய்தனர். இவர்களில் 22 பேர் பிக்கு மாணவர்களாவர். இவர்கள் கோட்டைப் பொலீஸ் நிலையத்தில் சில மணிநேரம் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இந்தக் களேபரம் காரணமாகக் கொழும்பு நகரில் நேற்றுப் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருந்தது.

தலைநகர் கொழும்பில் தொடர்ந்து நான்கு ஐந்து நாள்களுக்கு இத்தகைய ஆர்ப்பாட்டங்களை நடத்த மாணவர்கள் முஸ்தீபு செய்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது. (க)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கொண்டுள்ள சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் யார் என்பதும் எனக்குத் தெரியும். இது தமிழீழத்தை வழங்கும் முயற்சியல்ல. இது சாதாரண ஒரு நிர்வாக அமைப்பு. இதில் அனைத்துத் தரப்பினரும் உள்ளடக்கப்படுகின்றனர். இது என்ன என்பதைப் படிக்காத முட்டாள்களும் அறிந்திருக்கின்றனர். ஆனாலும் இதனை ஜே.வி.பி. எதிர்ப்பது ஏன் என்பது தான் தெரியவில்லை.

ஜே.வி.பியுடன் நாம் கூட்டமைப்பு அமைத்த போது துப்பாக்கி தூக்கியிருப்பவர்களுடன் நாம் கூட்டுச் சேர்கிறோம் என ஐ.தே.கட்சி விமர்சித்தது. அப்போது நாம் ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு ஜே.வி.பியிடம் கோரினோமா? அப்படியாயின் இப்போது சாதாரண நிர்வாகக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்காகப் புலிகளை ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு ஜே.வி.பி. கோருவதில் என்ன அர்த்தம்? அது இப்போது சாத்தியமானதா?

- இவ்வாறு ஜனாதிபதி மேலும் கூறினார். (க)

## பேரினவாதக் கொள்கைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றன. பின்னர் பிரேதப் பெட்டியை மாணவர்கள் பாடையில் ஏற்றித் தூக்கினார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள், ஊழியர்கள் அனைவரும் முன்னால் அணிவகுத்துச் செல்ல 'பறை' முழங்கியவாறு பாடை மற்றும் கொடும்பாவியுடன் ஊர்வலம் ஆரம்பமானது.

பிரேதப் பெட்டியை மாணவர்கள் காவிச் சென்றனர். ஊர்வலம் செல்லும் பாதையின் இருமருங்கும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. சீனவெடிகளும் கொளுத்தப்பட்டன. விசேட உடை அணிந்த மாணவர்கள் சிலர் பெரும் சத்தமிட்டு ஒப்பாரி வைத்தவாறு பிரேதப் பெட்டியின் பின்னால் சென்றார்கள்.

காலை 10.30 மணியளவில் ஊர்வலம் திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியை அடைந்தது. அங்கு நடுவீதியில் பிரேதப் பெட்டியும் கொடும்பாவியும் வைக்கப்பட்டன.

பெருமளவானோர் கூடிநிற்க அங்கு கூட்டம் ஆரம்பமானது. அதில் நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க.சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதனையடுத்து "தென்னிலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் சமாதான முன்னெடுப்புகளுக்கு எதிராகவும் பௌத்த குருமார்கள் மேற்கொண்டுவரும் தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகள் உடன்நிறுத்தப்படவேண்டும். தென்னிலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக் மேற்கொள்ளும் போராட்டங்கள் உடன் கைவிடப்படவேண்டும். அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நாமும் கிளர்ந்தெழுந்து போராட்டங்களை நடத்துவோம். அதன் ஆரம்ப நிகழ்வே இந்த வைபவம்" என்று கோஷம் எழுப்பியவாறு பௌத்த பேரினவாதக் கொள்கையடங்கிய பிரேதப் பெட்டிக்கும், டக்ளஸ் தேவானந்தாவின் கொடும்பாவிக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் தீமூட்டினார்கள்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான என்.ரவிராஜ், கி.சிவனேசன், பத்மினி சிதம்பரநாதன் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஒ-8-7-86-111-173)

## சிவராம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான்கு பொலீஸ் குழுக்கள் விசாரணையில் ஈடுபடுத்தப்பட்டன. இந்தப் பொலீஸ் குழுக்கள் மேற்கொண்ட தீவிர விசாரணையின் பின்னர் பம்பலப்பிட்டி பொலீஸ் நிலையத்துக்கு அருகில் அமைந்துள்ள தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) அலுவலகத்தில் வைத்து பீற்றர் என்ற புளொட் உறுப்பினர் கைதுசெய்யப்பட்டார். பீற்றர் புளொட் இயக்கத்தின் இராணுவப் பொறுப்பாளராக இருந்தவர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட தீவிர விசாரணையின் பின்னர் அவரிடமிருந்து சிவராம் பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசியின் 'சிம்' அட்டை (Sim Card) சிவராமைக் கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்டதாகக் கருதப்படும் வாகனம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

சிவராமின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் என இருவர் கைது செய்யப்பட்டனர். அதில் ஒருவர்மீது வழக்குத் தொடர்வதற்கான போதிய சாட்சியங்கள் இல்லை எனத் தெரிஉவிக்கப்பட்டது. எனினும், இந்தக் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் வேறு சிலரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் பொலீஸ் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். விரைவில் அவர்களும் தமது வலைக்குள் சிக்குவார்கள் என சரத் லூகொட நம்பிக்கை வெளியிட்டார்.

ஊடகவியலாளர் சிவராம் புளொட் இயக்கத்தின் முக்கிய உறுப்பினராக ஆரம்பகாலத்தில் செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது கொலையுடன் சம்பந்தப்பட்டவர் எனக் கருதப்படும் முக்கிய தமிழ் அரசியல்வாதியொருவரும் கைதுசெய்யப்படலாம் எனக் கூறப்படுகிறது.

இக்கொலையின் பின்னணியில் வெளிநாட்டு உளவு அமைப்பின் கையும் இருந்ததா எனபது குறித்தும் விசாரிக்கப்படுவதாகத் தெரிகின்றது.

## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட விடயங்கள் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் நேற்று தமிழ்ச்செல்வனுக்கு விளக்கிக் கூறினரென அறியவந்தது.

நாட்டின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலை மற்றும் திருகோணமலையில் நிறுவப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய புத்தர் சிலை ஆகியன தொடர்பாக ஜனாதிபதி கூறிய விடயங்கள் தமிழ்ச்செல்வனிடம் தெரிவிக்கப்பட்டன.

தற்போதைய நெருக்கடியான நிலையில் தமிழ்மக்களின் நிலைப்பாட்டில் சர்வதேச சமூகத்துக்கு மேலும் தெளிவுபடுத்தும் வகையில் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பது குறித்தும் நேற்றைய சந்திப்பில் தமிழ்ச்செல்வனுடன் தமிழ் எம்.பிக்கள் கலந்துரையாடினர்.(ஐ-13)


**UNIT**

எமது வாடிக்கையாளர்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டுள்ளது

மீண்டும் UNITன் UNIQUE Offer

எல்லா கணனி உதிரிகளும் குறைக்கப்பட்ட விலையில்

நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்

TV Tuner/Webcam/Woofer/UPS/Table Printer/Scanner & CD Cleaner, Screen Filter, Dust Cover, Mouse Pad Totally Free

3 வருட முழு உத்தரவாதம்

**UNIT** 347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021 - 4590720 / 0773134737 (C-43393)



புதிய யூனிவேசல் அக்கடமி

(யாழ். இந்து மகளிர் கல்லூரி அருகே)

அநேக மாணவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுகிறது

**A/L 2007**

பொருளியல்
K.உதயன்

ஆரம்பம்: 15.06.2005
புதன் 7a.m. (N.T)
(36523)(15-17-33)



**C.B. Computer Academy**

எமது நிறுவனத்தின் கற்கை நெறிகள் யாவும் (18.06.2005) அன்று ஆரம்பமாக இருப்பதனால் இன்றில் இருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

Kondavil.
021-4590291 (36557-15-17-54)

பணிப்பாளர்
K.R. சுகுமார்



**கணக்கீடு**

A/L 2006 - கம்பனி
ஆரம்பம் நாளை 6.30a.m.

A/L 2006 - பங்குடமை
ஆரம்பம் சனி 3.30p.m.

A/L 2007 தனி வியாபார முடிவுக் கணக்கு
ஆரம்பம் சனி 4.30p.m.

'விடுமுறைகால நேர அட்டவணை அலுவலகத்தில்'

S.தவா B.com (Hons) (Acc.Spl.)

NEW SCIENCE COLLEGE JAFFNA



**கீல்வாத மூட்டு வீக்கம்**

கீல்வாத மூட்டு வீக்கம் குணப்படுத்தமுடியாதது என உலகம் இதுவரை எண்ணியது. கீல்வாத மூட்டு வீக்கம் வைரஸினால் உருவாகிறது. அதனை நாங்கள் வைரஸ் எதிர்ப்பு ஆயுர்வேத மருந்தினால் சந்தேகத்திற்கு இடமின்றிக் குணப்படுத்துவோம்.

மேலதிக விவரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்:

FAIR
PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES) ABOL APPROVED COMPANY
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
(சி-43390)

A BOI Approved & ISo 9001:2000 Qms Certifed Company



**லிகிதர்கள் தேவை**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கணக்கீட்டில் சித்தியடைந்த கணனி அறிவுடைய ஆண் லிகிதர்கள் தேவை. தொடர்புடைய ஆவணங்களின் பிரதிகளுடன் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பங்களை 22.06.2005இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.

பணிப்பாளர்
உதயன் மனித வள சேவை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-43401)(15-17-33)



**நான்காம் ஆண்டு நினைவலைகள்**



திருமதி
சிவகாமி சின்னத்தம்பி

(இளைப்பாறிய கனிஷ்ட பாடசாலை அதிபர், யா/ வட இந்து மகளிர் கல்லூரி)

அன்புடன் நினைவு கூருகின்றோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

குடும்பத்தினர்.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.